# செந்தமிழ்

தொகுதி 78 செப்டம்பர் '84 பகுதி - 3

மதுரைத் தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMILSANGAM *

— உள்ளே —

— அரையர் சேவை

— சீனாவைப் பற்றிய செய்திகள்

— வெள்ளைக்கார சாமி கதை

மதுரைத் தமிழ்ச்சங்கம் — மதுரை - 1

ஆசிரியர் : என் எஸ் முத்துமலைச்சாமி B.A.B.L.


# செந்தமிழ்

தொகுதி 78 செப்டம்பர் 1984 பகுதி - 3


T4530

உள்ளே


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1) | அரையர்சேவையில் நாட்டுப்புறக் கூறுகள்<br>டாக்டர் — சு. வேங்கடராமன் | 101 |
| 2) | சீனாவைப் பற்றிய செய்திகள்<br>—அசாமி | 116 |
| 3) | வெள்ளைக்கார சாமி கதை—ஓர் திறனாய்வு<br>டாக்டர் ஏ. ஆதித்தன் | 121 |
| 4) | உயிர் வாழ்க்கையும் பரிணாம வளர்ச்சியும்.<br>டாக்டர் மெ. மெய்யப்பன் | 131 |
| 5) | தமிழ்ச் சங்கத்தின் புதிய செயலாளர் | 136 |
| 6) | மல்யுத்தப் போட்டியின் எதிர்காலம் | 139 |
| 7) | சங்கச் செய்திகள் | 140 |
| 8) | தமிழ் தேர்வு பற்றிய அறிவிப்பு | 146 |



அமரர் டி. பி. எம். பெரியசுவாமி

தோற்றம் : 29—9—1934 மறைவு : 3—5—1984

# அரையர் சேவையில் நாட்டுப்புறக் கூறுகள்

— டாக்டர் சு. வேங்கடராமன், எம்.ஏ., பிஎச்.டி.,

**தோற்றுவாய்:**

அரையர் சேவை என்பது வைணவத் திருக்கோயில்களில் இறைவனின் (உற்சவரின்) திருமுன்பு நடைபெறும் கலை ஆகும்.[1] ஆழ்வாரின் பாசுரங்களை இசையுடன் பாடி, அபிநயித்து, அவற்றின் வியாக்யானங்களைக் கூறும் கலைஞர் அரையர் என்று அழைக்கப்படுகின்றனர். இயல், இசை, கூத்து ஆகிய முக்கூறுகளையும் தன்னுள் கொண்ட முத்தமிழ்க்கலை இது. அரையர் என்ற சொல் அரசர் எனப் பொருள்படும். (அரயர் - அரசர்) ஆழ்வாரின் பிரதிநிதிகளாயிருந்து அரையர் இந்தப் பணியைச் செய்கின்றார். ஆகவே, இவர் பாசுரங்களுக்கு அரசர் ஆகிறார். (அறைதல் - சொல்லுதல்) ஆழ்வாரின் பாசுரங்களை இவர்கள் சொல்லுவதால், அரையர் (அறையர்) என்று அழைக்கப்பட்டனர். இவர்களை விண்ணப்பஞ் செய்வார், நம்பாடுவான், இசைகாரர் என்று கோயிலொழுகு, வியாக்யானங்கள், கல்வெட்டு ஆகியன கூறும். திருவரங்கத்தில் உள்ள இறைவன் நம்பெருமாள் இவர்களுக்கு அரையர்என்ற பட்டத்தை அளித்தான் என்று கோயிலொழுகு கூறும்.[2] அரையர் சேவை, கொண்டாட்டம், பாசுரத்தை இசையுடன் பாடுதல், பாசுரத்திற்கு அபிநயஞ் செய்தல், பாசுர வியாக்யானம் சொல்லுதல், கொண்டாட்டம் என ஐந்து பிரிவுகளாக அமையும். கொண்டாட்டம் என்பது இறைவன் புகழ்பாடுதல் ஆகும். அரையரின் இசை பழந்தமிழரின் பண் முறையை ஒட்டியது. அரையர், பாசுரங்களுக்கு மட்டும் அபிநயஞ் செய்த போதிலும் முத்துக்குறி நிகழ்ச்சியில் மட்டும் பாசுரத்துடன் உரைக்கும் அபி

---

1. இக்கலை பற்றி விரிவாக அறியக் கீழ்க்காணும் கட்டுரையைக் காணவும். சு. வேங்கடராமன், ''வைணவம் வளர்க்கும் கலை (அரையர் சேவை ஓர் அறிமுகம்)'', தினமலர், 17. 10. 1978. ப. 5, திருநெல்வேலி.

2. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் (ப, ஆ.), கோயிலொழுகு, ப 34 திருச்சி, 1976.

நயிப்பர். முகபாவம், முத்திரைகள், கை அசைவுகள், ஜதி செய்தல் என்ற பல்வேறு நிலைகளிலும் அபிநயம் அமைந்து பாசுரங்களின்-உரையின் - கருத்துவிளக்கம் முழுவதும் இதன்வழி வெளிப்படும். அரையர் கூறும் வியாக்யானம் தம்பிரான்படி என்று அழைக்கப் படுகிறது. அரையர் 'நம்பிரான்மார்' என்று அழைக்கப்படுவதால் அவர் கூறும் உரை இப்பெயர் பெற்றது. அந்த உரை இன்றளவும் அச்சாகாமல் அரையர்களிடம் ஏட்டுச்சுவடியாக உள்ளது.

**கலையின் தோற்றம்;**

நாலாயிர திவ்வியப்பிரபந்த பாசுரங்களில், ''பாலேய் தமிழர் இசைகாரர்'' (திருவாய்மொழி 1.5.11) எனவும், ''பாடி நின்றாடு மின் தொண்டீர்'' எனவும், இடம்பெற்ற போதிலும் அரையர் பற்றிய குறிப்பு ஆழ்வார் பாசுரங்களில் இல்லை. வைணவ மரபுச் செய்திகளின்படி, இக்கலைத் தோற்றம் பற்றி இரு கருத்துக்கள் உள்ளன. திருமங்கைஆழ்வார் ஒருமுறை திருவரங்க ஆலயத்தில் இறைமுன் திருக்கார்த்திகை மஹோத்ஸவத்தில் தம்முடைய திரு-நெடுந்தாண்டகம், பிரபந்தத்தைத் தேவகானத்தில் ஏறியிட்டு அபி-நயித்து அநுசந்தித்தார். அதனால் மனம் மகிழ்ந்த இறைவன் அவர் வேண்டிய வரமளித்தான். மார்கழி மாதத்தில் சுக்லபட்சத்தில் ஏகாதசியன்று அத்யயநோத்ஸவம் கொண்டருளும்போது நம்மாழ்-வாரின் திருவாய்மொழியை வேதங்களுடன் கேட்டருளி, வேதத்-திற்கு இணையான இடம் திருவாய் மொழிக்கு அளிக்க வேண்டு-மாய் ஆழ்வார் கேட்க, இறைவனும் அளித்தான். அன்றுமுதல் அத்யயநோத்ஸவத்தில் நம்மாழ்வார் திருவாய்மொழி இசையுடன் பாடி அபிநயிக்கப்பட்டது. ஆழ்வார் திருநகரியில் (நம்மாழ்வாரின் பிறப்புத்தலம்) இருந்து நம்மாழ்வாரின் திருவுருவத்தைத் திருவரங்-கத்திற்கு எடுத்துவந்து மார்கழி அத்யயன விழா நடத்தினர். நம்மாழ்வாரின் பிரதிநிதியாக இருந்து மதுரகவி ஆழ்வார் திருவாய்-மொழியை இசையுடன் பாடி அபிநயித்தார். பலகாலம் நடந்த இவ்விழா இடையில் நடைப்பட்டதின் காரணம் தெரியவில்லை.

ஆழ்வார்களின் பாசுரங்களை நாலாயிர திவ்யபிரபந்தமாகத் தொகுத்த நாதமுனிகள் (கி.பி. 823-917) ஸ்ரீரங்கத்தில் மார்கழி-மாத அத்யயன உற்சவத்தில் திருமொழித் திருநாளாகிய பகல்-பத்தைத் தொடங்கிவைத்தார். முன்னமே திருமங்கையாழ்வாரால் தொடங்கப்பெற்று, இடையறவு பட்டிருந்த திருவாய்மொழித் திரு-நாளையும் மீண்டும் நடைபெறச் செய்தார். திருமொழித் திரு-

நாளைப் பகல்பத்து எனவும், திருவாய் மொழித் திருநாளை இராப்பத்து எனவும் பெயரிட்டு அந்நாட்களில் ஆழ்வார் பாசுரங்-களை இசையுடன் பாடி அபிநயிக்கும் கலையைத் தோற்றுவித்தார். தேவகானத்தில் ஏறியிட்டு மதுரகவியாழ்வாரைப்போல அபிநயத்-துடன் சாதித்தார். தம்முடைய மருமக்களான மேலையகத்தாழ் வான், கீழையகத்தாழ்வான் ஆகிய இருவர்க்கும் இக்கலையைக் கற்றுத்தந்து, அவர்கள்வழி மரபுவழியாக இக்கலைவளரச் செய்தார். அவர்கள் இருவரின் இசைக்கு உருகிய திருவரங்க இறைவன் நம்பெருமாள், அவர்களுக்குத் (அரையர்களுக்கு) தலையில் அணி-யும் குல்லா, பரிவட்டமாகப் பட்டும் பருத்தியும், சூடிக்களைந்த திருமாலைகள் ஆகியவற்றையும் அளித்தான் அவர்களுக்கு அரையர் என்று பெயரும் அளித்தான். இவ்வாறு அரையர் சேவையின் தோற்றம் பற்றிய இரு செய்திகளைக் கோயிலொழுகு, குருபரம்-பரை நூற்கள் வழி அறிகிறோம். பழமையான இம்முத்தமிழ்க் கலையை நாதமுனிகள் நடைமுறைக்குக் கொண்டுவந்தார், பின்னர் நாதமுனிகளின் திருப்பேரரான ஆளவந்தார், இராமாநுஜர், எம்பார் போன்ற வைணவ ஆசாரியர்கள் இக்கலையைப் போற்றிப் பாதுகாத்தனர். வைணவக் கோயில்கள் பலவற்றிலும் நடைபெற்று வந்த இக்கலை, இன்று ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம் ஆகிய மூன்று தலங்களில் மட்டும் நடைபெற்று வருகிறது. மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசிக்கு முன்னுள்ள பத்து நாட்கள் பகல்பத்து எனவும், பின்னுள்ள பத்து நாட்கள் இராப்பத்து எனவும் முறையே அழைக்கப்பெறும். இந்த நாட்களில் இக்கலை நிகழ்கிறது.

சமயச்சடங்குகள் (Rituals) என்னும் கரணங்களை ஒட்டியே நாடகக்கலையின் (கூத்துக்கலையின்) தோற்றம் இருந்து வந்துள்ளது. இவ்வாறு வளரும் கலை செவ்வியல் கலையாக (classical art) இருந்தபோதிலும் நாட்டுப்புறக்கலைக் கூறுகளையும் படிப்படியாகத் தன்னுள் இணைத்துக்கொண்டு வளர்ந்தது. மக்கள் அனைவரின் சுவையுணர்விற்கும் ஏற்ப, நாட்டுப்புறக் கூறுகளை இயல், இசை, கூத்து என்ற மூன்று நிலைகளிலும் ஏற்று வளர்ந்தது,

அரையர் சேவையில் பள்ளுப்பாட்டு பாடுவதும், முத்துக்குறி நிகழ்ச்சியும் இவ்வாறு நாட்டுப்புறக் கூறுகளைக் கொண்டு வளர்ந்த கூறுகளாகும். அரையர் தம் கைகளில் வைத்துள்ள தாளங்களைத்

தவிர வேறு இசைக்கருவிகளை இக்கலையில் பயன்படுத்துவதில்லை. தற்போது பள்ளுப்பாட்டு பாடும்போது மட்டும் மிருதங்கத்தைப் பயன்படுத்துகின்றனர்.

**பள்ளுப்பாட்டு:**

ஒருசமயம் அரையர் ஒருவர் (இவருக்கு வரந்தரும் பெருமாளரையர் என்று இறைவன் நம்பெருமாளே அருளப் பாடிட்டான். இவர் நஞ்சீயர் காலத்தவராதலின், இந்த அரையர் காலம் கி. பி. 1113 - 1208) தம்முடைய இறைப்பணிகளை மறந்து, சிற்றின்பத்தில் திளைத்து, பறைச்சேரிகளில் அலைந்து அங்கே தங்கினார். அவரைத்திருத்திப் பணிகொள்ள விரும்பிய இறைவன், திருவிழாவிற்காகச் சென்றபோது அந்த அரையரை அழைப்பித்து, அவர் பறைச்சேரியில் கற்ற பாடல்களைப் பறை இசையுடன் கேட்டு மகிழ்ந்தான். இவ்வாறு அவரைப்பணிக்குத் திருத்தி ஏற்றுக்கொண்டு அவருக்கு வரந்தரும் பெருமாள் அரையர் என்று பெயர் சூட்டினான். பறைச்சேரியில் இருந்து அரையர் கற்றுவந்த பள்ளுப்பாடல்களையும் பறை இசையையும் இவ்வாறு அரையர் சேவை தன்னுள் ஏற்றது. நாட்டுப்புறப் பாடல்களின் இசையும் இசைக்கருவியும் இக்கலையில் இணைந்தன.

அரையர் பாடும் பள்ளுப்பாட்டு திருமாலின் புகழ்பாடும் பாடல்கள். இப்பாடல்களில் நேரடியான கவிக்கூற்றும், மாந்தர் கூற்று அமைப்பில் (தலைவி கூற்றில் அமைந்தவை) உள்ள பாங்கும் காணப்படுகின்றன. எளிய சொற்களும் உணர்ச்சிக் கூறும் மிக்க இப்பாடல்களில் நிகழ்ச்சித்தொடர்போ இணைப்பான கதைப்போக்கோ இல்லை. பள்ளர்சேரியில் வாழும் மக்கள் பாடும் பாட்டு - பள்ளுப்பாட்டு என்பதே இதன் பொருளாகும். இன்று நடைமுறையில் மூன்று தலங்களிலும் அரையர் இப்பள்ளுப்பாடல்களைத் திருவூறல் திருவிழா, திருமுடிசேவை, படியேற்ற சேவை ஆகிய விழாக்காலங்களில் பாடுகின்றனர். தற்போது, அரையர் இப்பாடல்களைப் பாடும்போது பறைக்குப் பதிலாக மிருதங்கத்தைப் பயன்படுத்துகின்றனர். அரையர் பறைச்சேரிலிருந்து கொண்டுவந்த நாட்டுப்புற இசைக்கருவியான பறையைப் பிற்காலத்தில் கோயில்காரர்களான மேற்சாதியினர் மிருதங்கமாக - செவ்வியல் இசைக்கருவி (classical instrument) யாக மாற்றினர். இவ்வாறு அரையர் சேவை கலையில் நாட்டுப்புற இசைக்கருவி, செவ்வியல் இசைக்கவியாக மேல்நிலையாக்கம் பெற்றது. அரையர் பறைச்சேரியில் கற்ற 'பள்ளும். பறையும் இசையுடன்

கேட்டருளும்படித் திருவுள்ளம் பற்றியதன் வழி இறைவன் தன்முன் அனைவரும் சமம் என்று மெய்ப்பித்தான். கோயிலில் நுழைய அனுமதி மறுக்கப்பெற்ற மக்களைத் தொண்டக்குலம் என்று பெயரிட்டு இராமாநுசர் ஆலய நுழைவு செய்வித்த போதிலும் பிற்கால வைதிக சமயம் அதை ஏற்காது போயிற்று. அதேபோல அரையர் இசைக்கலை வழியே நடைபெற்ற நாட்டுப்புறமரபில் செவ்வியல் கருவியைக் கலந்தனர்.

**முத்துக்குறி :**

அரையர் சேவையில் பகல்பத்து உற்சவத்தில் இடம்பெறும் ஒருநாள் நிகழ்ச்சி முத்துக்குறி, திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகத்தின் பதினோரம் பாசுரமான 'பட்டுடுக்கும் அயர்த்திரங்கும்' என்பதற்குரிய நிகழ்ச்சி இது. இப்பாசுரத்தின் ஈற்றடியில் 'கட்டுவிச்சி சொல் என்னச் சொன்னாள்' என்று வருகிறது. கட்டுவிச்சியை அழைத்துக் கட்டுப்படுத்தி நோய்செய்தவன் யார் என்று அறிகின்றாள் தாய். ஆழ்வாரின் பாசுரத்திலே கட்டுவிச்சி என்ற சொல் இடம்பெறுகிறது. இப்பாசுரத்திற்கு உருவான அரையரின் தம்பிரான்படி வியாக்யானத்தில்[3] குறம், குறவஞ்சிக் கூறுகள் மிகுந்துள்ளன. கட்டுவிச்சி, முத்துக்களைக் கொண்டு குறி பார்ப்பதால் முத்துக்குறி என்று இந்நிகழ்ச்சி பெயர்பெற்றது. பாசுரத்தின் அமைப்பு அகப்பொருள் இயல்பினை உடையது. கடல்வண்ணனின் மையலில் நோயுற்ற தன்மைகள் நிலைகண்டு தாய் புலம்புவதும் கட்டுவிச்சியை அழைத்து. கட்டுப்படுத்தி நோய்செய்தவன் திருமால் என உணர்வதும் ஆன நிலைகள் பாசுரத்தில் உள்ளன. முற்கூறியது போல, இந்நிகழ்ச்சியில் மட்டும் பாசுரத்துடன் உரைக்கும் அபிநயம் உண்டு. வியாக்யானத்தில், 1) குறத்தி வருகை - அ) தோற்ற வருணனை; ஆ) அறிமுகம் - தன்னைத்தானே அறிமுகஞ் செய்து கொள்ளல் (மருந்து - தொழிற்பாடு கூறல்),

2) தலவி நிலை - அ) கூடல் இழைத்தல்., ஆ) பிரிவாற்றாமை;
3) மகள் நிலைகண்டு தாய் வருந்தல் - அ) கட்டுவிச்சியைத் தோழியர் அழைத்தல் ?

---

[3] ஆழ்வார் திருநகரி வடபத்ரசாயி சாரங்கன் அரையரிடம் உள்ள தம்பிரான்படி ஏட்டுச்சுவடி உரையில் இருந்து படியெடுக்கப்பட்டுள்ள பகுதியே இக்கட்டுரையில்ஆளப்படுகிறது. மூன்றுதல அரையர்களிடமும் உள்ள உரைகளில் வேறுபாடு ஏதுமில்லை.

4) குறத்தி வருகை - அ) குறத்தியைப் பார்த்துப் பல்லி நன்னிமித்தம் கூறல் ;

ஆ) நீ யாருடைய கட்டுவிச்சி என்று தாய் வினவல்;

5) குறத்தி தன் பெருமை கூறல் ;

6) குறத்தி - தாய் உரையாடல் (மகள் நோய் பற்றி)

7) குறத்தி கட்டுப்படுத்தல் ;

8) மருந்து கூறல் ;

9) தாய் தன் மகளைப் பெருமாள் திருமுன் இட்டுப்புலம்பல் என்ற பல பகுதிகள் உள்ளன. குறத்தியின் பங்கும் பணியும் இதில் பெரிது.

குறம் கூறுகள்

தம்பிரான்படியில் இவ்வாறு பல்வேறு படிநிலைகள் நாடகப்பாங்குடன் உள்ளன: தாய், மகள், கட்டுவிச்சி (குறத்தி) ஆகிய மூன்று மாந்தர்களாக அரையர் ஒருவரே மாறி மாறி அபிநயித்துச் செயற்படுகிறார். குரலில் ஏற்ற இறக்கம் கூட்டி அவர் உரையாடுகிறார். ஒரேபோதில் இரு மாந்தர் வருமிடத்தில் பெருமாளின் திருமுன் தலைவியை இட்டுத் தாய் புலம்புமிடத்தில் - தம் கையிலுள்ள பட்டுத்துண்டை மகளாகப்பாவித்து, அதைக் கையில் பற்றியவண்ணம் தாய் புலம்புகிறாள்; ஒவ்வொரு மாந்தராக மாறி அரையர் அபிநயிக்கிறார். குறத்தியாக வரும் போது, உரை முழுவதும் பேச்சுத்தமிழில் வருகிறது. அரையரின் உடையில் மாற்றம் ஏதுமில்லை. நிகழ்ச்சியை விடவும் அது நிகழும் சூழல். மக்களின் பழக்கவழக்கம், பண்பாடு ஆகியவற்றை அவர்தம் மொழியிலே விளக்குவது நாட்டுப்புற நாடக மரபு. குறத்தியின் அறிமுகப்பகுதியில் இப்பாங்குகள் புலனாகின்றன. கதைமாந்தர் தம் இயல்புகளை - பெருமைகளை - தாமே கூறி வருவதும் நாட்டுப்புற நாடக மரபாகும்,

''பிள்ளைப்பாம்புண்டு பிரசையுண்டு பித்துமுண்டு அள்ளிப் பூசலாம் அதில் நல்ல நெய்யுமுண்டு. கள்ள நாய்க்கண்ணும் காராளை மதமும் உண்டு; கொள்ள எங்குற்றார் இதற்குரியார்? மகளார் தாமே. காக்கை நாக்குண்டு; கருங்கோழி முட்டையுண்டு; ஆக்கம்தரும் இந்த ஆந்தையுள் பித்துமுண்டு; மூக்கைப் பாம்புண்டு; முளைக்கார நெய்யுமுண்டு; பாக்கிலிடும் இந்தப் பழமருந்து சொன்னேன்; நல்ல மருந்து கண்டு - நாய்க்கிட்டு நான் கண்டது. சொல்லி நல்லதோர் அகந்தனில் கரியிலிடும் பல்லை இறுத்துள்ள பழந்தானும் தருவன். எல்லா மலையிலும் இம்மருந்து போல் இல்லை கண்டாய். இச்சையுரையேன் நான். இளங்கொடி! குரங்குமுண்டு. குற்றம் அற்றதோர் கோரோசனையும் உண்டு; பச்சைப் பாம்புண்டு; பகை வெல்லும் துடரியுண்டு, கச்சுமுலையாளே கருத்தவிழியாரே கேளீர்''

என்று குறத்தி, தன்னை அறிமுகம் செய்து கொள்கிறாள். அவளுடைய தொழிற்பாடு இனப்பழக்கவழக்கம், அவள் வாழும் சூழல் ஆகியன அவளுடைய சுய அறிமுகத்தில் புலனாகின்றன.

இவ்வாறே தாயார் கட்டுவிச்சியிடம் 'நீ யாருடைய கட்டுவிச்சி' என்று கேட்குமிடத்திலும் அவள் தன்னை அறிமுகஞ் செய்து கொள்கிறாள். அங்கு அவளுடைய குறி கூறும் திறன், வையகமெங்கும்-மாலுறையும் மங்களாசாசனம் பெற்ற தலங்கள் எங்கும் - சுற்றி வரும் ஆற்றல், மறந்தும் புறந்தொழா அவள் இயல்பு, பிற உலகியல் குறத்திகளில் இருந்து வேறுபட்டு நிற்கும் அவள் தனித்தன்மை ஆகியன புலனாகின்றன.

''ஆரார் என்னை அழைத்தவர்? ஆராமம் சூழரங்கம் திருமலை காராரும் கச்சி புகுந்து இன்றேபோய் மீள் வேனை ஆரார் என்னை அழைத்தவர்?

''பீலித்தழை சுற்றிப் பிரசையை முதுகில்கொண்டு சாலக் குறம் சொல்லிச் சதிர்பேசும் குறத்தி அல்லேன், ஆலித்திருநாடன் அருள்மாரி அரட்டமுக்கி மாலை பறித்தான்

தன் வளம் பாடும் குறத்தி நானே. வாராய் முலை-
யாளே வருநன்மை உனக்கீதொன்று 'தாராய் எனக்கு
நெல்' எனப் பாடும் குறத்தி அல்லேன். சீரார் சட-
கோபன் தமிழ்வேதம் தழைக்க வந்த ஏரார் பெரும்பூ-
தூர் இளையாழ்வார் குறத்தி நானே.''

இவ்வாறு குறத்தியின் அறிமுகம் அமைகிறது. குறம் இலக்கியத்-தில், குறத்தியின் சுய அறிமுகம் காணப்படுகிறது. குறத்தி அறி-முகம் என்ற நிலையில் அவள் தோற்றம், அவளிடம் உள்ள மருந்துகள் ஆகியவற்றைக் கூறி அவள் தானாகச் சுய அறிமுகம் செய்வதாகவோ அல்லது கவிஞர் அவளை அறிமுகஞ்செய்வதாக-வோ உள்ள பாங்கைக்குறம் இலக்கியத்தில் காணுகிறோம். முத்துக்குறியில் வரும் குறத்தியின் தோற்றம், ''மருங்கிலோர் பிள்ளையும் வயிற்றிலோர் குட்டனும் நெருங்கி விம்மு கொங்கை-மேல் நிரைத்த வெள்வடங்களும்'' என்று காட்டப்படுகிறது. இடுப்பில் பிள்ளையுடன் குறத்தி காட்டப்படுவது இதன் தனித்-தன்மை. திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம் நூலில் குறத்தி தோற்ற வருணனை பாடுமிடத்தில், ''குழவிமருங் கணைந்து'' என்று வருவது அறியத்தக்கது.

குறத்தி தன்னை அறிமுகஞ்செய்து கொள்ளுகையில் தன் தொழிற்பாடு வெளிப்பட மருந்து பல கூறுவதை முன்னர்க் கண்-டோம். மின்னொளியாள் குறம் போன்ற நாட்டுப்புறக் குறம் நூற்களில் மட்டும் இப்பாங்குள்ளது. குறத்தி தன் பெருமை கூறித் தன்னை அறிமுகஞ்செய்து கொள்ளும் பாங்கு, முத்துக்குறியில் உள்ளது. குறம் இலக்கியத்திலும் இக்கூறு உள்ளது. குறத்தி குறி சொல்வதற்காக வருங்கால் தலைவியின் வீட்டு வாசலிலே ஒரு பல்லி நன்னிமித்தம் சொல்கிறது.

''இவ்வண்ணம் வந்த கட்டுவிச்சிக்குப் பெண்பிள்ளை திரு-மாளிகை வாசலிலே ஒரு பல்லி சொல்லிற்று.'' பல்லியிடுவது சொன்ன குறியிது மண்ணில் அழகிது. பவ்வபணைமிசை வல்லி உறைபவன் மணவாளன் வருமவன். மனைத்தெய்வம் தன்னை வேண்டியதெல்லாம் தரும். விண்ணிலுள்ளவன் மண்ணிலுள்ளவன் சொல்லின் அமுது இது. குழை தூய அழகிது.

தூய்மை வருகுது. துன்பமொழியுது. நல்ல கணவனை நண்ணும் குறியிது.

நன்மை வருகுது - நன்மை வருகுது. வண்டுலாவு சோலைசூழ் மல்லி வளநாடியே! உன் வாசல் கௌளி சொல்லுது. வருநன்மை மிக உண்டு. மைந்தரோடு உறவு உண்டாம். கடலுங் கூடுங்காண் மணவாளன் மருவும்; அவன் மனைத்தெய்வம் தன்னாணை''.
இவ்வாறு குறி சொல்ல வருபவளுக்கு, மனை வாசலிலே பல்லி வாயிலாக நன்னிமித்தம் கிட்டுவதாகக் கூறுவது குற இலக்கிய இயல்பு. அரையரின் முத்துக்குறியில் குறத்தியிடம் பல்லி பேசுவதாக வருவது தனித்தன்மை உடையது. நல்நிமித்தல் கூறிய பல்லி இறுதியில் ''உண்டு பசிதீர என்னொரு குஞ்சுதனக்கு ஒரு பிடிசோறிடு லோக மாதாவே'' என்று கேட்பது புதிய கூறு

**தலைவி புலம்பல் :**

தலைவன் வாராமையால், காதல் நோயால் மெலிவுற்ற தலைவி வாடுவதும் புலம்புவதும் இயல்பு. தலைவி புலம்புவதைக் குறம் இலக்கியத்தில் காணலாம். இங்கு-அரையா சேவையில்-

> ''வெள்மணல் விரிக்கும்-வலம்படச் சுழிககும். அச்சுழியை என்னும்மலர்க்கையால் அழித்திடும். உள்நடுங்கும். மைக் கண்ணீரால் மெய்குளிர்க்கும். மால் கொடிதே கொடிதே! பூநிலா ஆகாதே என்னும், 'என் செய்கேன் தெய்வமே' என்னும் பொன்னிறமாய் விடும் பூவை தன்னைத் தழுவானோ? பொன்னி சூழ் தென்னரங்கனார்-புவிமுழுதளந்த பெருமாளே என்று கூடல் வளைப்பதும் குயில்களோடு தோழமை கொள்வதும் கனாக்காண்பதும் வாய்வெருவுதும் வாய்புலத்துவதும் ஆற்றாமை சொல்லி அழுவதும் சிந்திப்பதும் திசைப்பதும் தேறுவதும் கைகூப்புவதும்...'' என்று தலைவி வாடுவதும் புலம்புவதும் காட்டப்படுகின்றன,

**கூடல் இழைத்தல் :**

இந்நிலையில் தலைவன் வருவானோ என்று அறியத் தலைவி கூடலிழைத்துப் பார்க்கிறாள். (தலைவி கூடலிழைப்பதை அரையர் அபிநயிக்கிறார். கையில் உள்ள தட்டில் பரப்பப்பட்டுள்ள அரிசியைத் தவள மணலாகப் பாவித்துக் கூடலிழைக்கிறார். கூடல் கூடுவதாக அவர் அறிவிக்கிறார்.

''கூடிவா கூடலே! கொண்டல் வண்ணர் வேங்கடவர் கூடுவர் ஆகில் கூடிடு கூடிலே. கூடிவா கூடலே கோதை சேர் அரங்கனார் கூடுவராகில் கூடிடு கூடலே. குருகைப் பொலிந்துநின்றார் கூடுவாராகில் கூடிடு கூடலே''

தலைவி கூடலிழைத்துப் பார்க்கும் கூறு. பின்னால் தோன்றிய குற்றாலக்குறவஞ்சி, சோலைமலைக் குறவஞ்சி போன்ற குறவஞ்சி இலக்கியங்களில் இடம்பெற்றது.

குறத்தி வருகையில் தன்னை அறிமுகஞ்செய்து கொள்வதன் வாயிலாகப் பாடற்றலைவன் (இறைவன்), அவன் அடியார் புகழ் பாடித் தன்னை அறிமுகஞ் செய்து கொண்டு வருகிறாள்.

''வையம் பதினாலும் மனைதோறும் சென்று இரந்து வெய்ய உரைசொல்லி வீண்பேசும் குறத்தி அல்லேன். கையில் தலைஓடும் கனலுங்கொண்டு உழல்தேவர்க்கு ஐயமிடும் தேவர் அரங்கனார் குறத்தி நானே. மண்ணில் சிறுபூடும் மலையில் பச்சிலையுங் கொண்டு கண்ணுக்-கிடும் மருந்தென்னும் கானக்குறத்தி அல்லேன். பெண்ணில் திருவே கேள். பெரும்பூதூர் இளையாழ்வார் கண்ணுக்கு இனியான்தன் கழல்பாடும் குறத்தி நானே.

இப்பாங்கு பின்னர்த் தோன்றிய குற்றாலக் குறவஞ்சி, சோலை மலைக் குறவஞ்சி ஆகிய குறவஞ்சி இலக்கிய நூற்களில் உள்ளது. உலகியல் குறத்தி போல நான் அல்லேன் என்று முதலிரு அடி களில் கூறி அடுத்த இரு அடிகளில் தான் இத்தன்மைமிக்க குறத்தி என்று கூறுகிற பாங்கு, தத்துவராயர் (கி பி 15 ம் நூற்றாண்டு) பாடிய குறத்தி பாடல்களில் உள்ளது.

''பச்சை வடம்பூண்டு பசுங்குழவி யரைசேர்த்துப் பிச்சை பலகொண்டு பிழைபேசுங் குறத்தி யல்லேன் அச்சமறத்-துறந்த அதிகாரி குடிதோறும் விச்சை பலசொல்லி விளை-யாடும் குறத்தியேனே''

என்பது தத்துவராயர் பாட்டு.

குறத்தி குறி காண மனையில் நுழைகிறாள். அவளிடத்தில், உன்னுடைய ஊர் என்ன? பேர் என்ன? நீ இதற்குமுன் யாருக்குக்

குறி கூறினாய்? என்று தலைவி வினவும் பாங்கு பின்னர்த் தோன்றிய குறவஞ்சி நூற்களில் (தியாகேசர் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி) இடம் பெற்றுள்ளது. முத்துக்குறியில், இவ்வினாக்களைத் திருத்தாயார் கேட்கிறாள். ('இவ்வண்ணம் வந்த கட்டுவிச்சியைப் பெண்பிள்ளையுடைய திருத்தாயார் பார்த்து, 'நீயாருடைய கட்டு-விச்சி எவருடைய கட்டுவிச்சி? உன் நாடேது? ஊரேது?'' என்ன கட்டுவிச்சியும் இங்ஙனே சொன்னாள்).

குறத்தியின் தோற்றப்பொலிவு வருணணை முத்துக்குறியில் உள்ளது. குறவஞ்சி நூற்களிலும் இக்கூறு இடம்பெறுகிறது. குறத்தி குறி பார்க்க மனையில் புகும்போது வாசல்வளம் பாடுவது ('வாச-லிது வாசலிது மகராஜன் வாசலிது' - தியாகேசர் குறவஞ்சி) குறவஞ்சியில் காணப்படும் கூறு. அரையரின் முத்துக்குறியில், குறி பார்த்து உண்மை உணரப்பட்ட பின், தன் மகளை இறை-வன் திருமுன் போட்டுத் தாய் புலம்பும் இடத்தில் வாசல்வளம் பேசப்படுகிறது. (''தொழும் பிரமர் கொடுக்கும் தோதவத்தித் தூய்-மறையோர் செரும்பிரம்பு கொண்டு நிற்கும் திருவணுக்கன் திருவாசல்'')

குறத்தி தன்னை அறிமுகஞ்செய்து கொள்ளுமிடத்தில் தன் பெருமை கூறுவதும் தொழிற் சிறப்புக் கூறுவதும் உள்ள பாங்கை முன்னர்க்கண்டோம். இப்பாங்கு குறவஞ்சி இலக்கியத்திலும் உள்ளது. குறிபார்க்குமுன் பல்லி நன்னிமித்தம் கூறுவதுபற்றி முன்னர்க்-கண்டோம். குற்றாலக் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி ஆகிய குறவஞ்சி இலக்கியங்களில் இக்கூறு உள்ளது. 'தன்னுடைய குஞ்சிற்கு ஒருபிடிசோறு தா' என்று பல்லி குறத்தியிடம் வேண்டுவ தாக அரையரின் குறம் காட்டுகிறது. தலைவியிடம் தன் பிள்ளைக்குச் சோறு கேட்கும் குறத்தியைக் கும்பேசர் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நூற்களில் காண்கிறோம்.

குறத்தி குறிபார்க்கும் முறையில் தெய்வமேறிக் குறி சொல் வதாக அரையரின் குறத்தில் உள்ளது. ''காரார் குழற்கொண்டை கட்டுவிச்சி கட்டேறிச் சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா, நெல்லைச் சுளகிலே குறித்த குறி செல்லுகிறேன்'' என்று குறத்தி குறி கூறுவது காட்டப்படுகிறது. தெய்வமேறிக் குறி பார்ப்பதாகக் குறவஞ்சி இலக்கியத்திலும் (குற்றாலக்குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, சோலைமலைக் குறவஞ்சி) காணப்படுகிறது.

**கட்டுப்படுத்தல் :**

அரையரின் குறத்தில், குறத்தி, தலைவியின் நிலை முழுவதையும் (அவளுற்ற நோய் யாது? அதன் படிநிலைகள் என்ன என்பவற்றை) முதலில் தாயிடம் கேட்டறிகிறாள். (பருவம், செய்திப்பாடு, ஆசைப்பாடு, சிந்தனை, வினவுதல், நோக்குபேச்சு, வாய்வெருவுதல், கனாக்காணல் ஆகிய படி நிலைகளைக் குறத்தி கேட்டறிகிறாள். ஒவ்வொரு நிலையிலும் அவளுக்கு மால் செய்தவன் மாயவன் என உணர்கிறாள்) இவ்வாறு நோயுற்றவள் பற்றி முழுவதுமாக வினவி அறிந்து, பின்னர் குறத்தி கட்டுப்படுத்துவது இதன் தனித்தன்மை. அவ்வாறே, நோய் செய்தவன் திருமால் என்பதைத் தாய்க்குக் குறத்தி எடுத்துரைத்தபின், அவளிடமே தாய் மருந்து வினவுகிறாள்; குறத்தியும் மருந்து கூற, தாய் அதன்படிச் செயற்பட முடிவில் தலைவன் தலைவி மணஞ்செய்து கொண்டார்கள் என்ற மங்கல முடிவும் காட்டப்படுவது அரையரின் குறத்தில் ஒரு தனி இயல்பு. பார்வையாளர்களை மனத்திற் கொண்டு நாட்டுப்புறக் கூத்து மரபிற்கேற்ப இறுதியில் கூடினர் என்று காட்டும் நிகழ்ச்சி இயைபு அரையர் குறத்தின் தனிச்சிறப்பு. நோய்க்கு மருந்தாக, அவன் திருமுன் இட்டு வைத்து அவன் பெயரைச் செவியில் ஓதி அவனுடைய துளவ மாலையைச் சூட்டி வையுங்கள் என்று குறத்தி கூறுகிறாள். தாயும் அவ்வாறே செயற்படுகிறாள். பார்வையாளர்களுக்குத் தலைவனுடன் தலைவி கூடினாள் என்ற முடிவை-மங்கல முடிவை-உணர்த்துவதற்காக, "ஒரு மகள் தன்னை உடையேன் உலகம் நிறைத்த புகழால் திருமகள் போல வளர்த்தேன்; செங்கண்மால்தான் கொண்டு போனான். ஓ! கடல்வண்ணர் இது செய்தார்" என்று தாய் கூறுவதுடன் நிகழ்ச்சி முடிகிறது.

**கூத்துமரபு, (காட்சி மாற்றம்)**

நாட்டுப்புறக்கூத்தில் காணப்படும் கூறுகள் சிலவற்றை அரையர் முத்துக்குறி சேவையில் காண்கிறோம். காட்சி மாற்றங்களை மாந்தர் கூற்று வழியாகவே நாட்டுப்புறக் கூத்தில் அறியலாம். குறத்தி வருகை முதற் காட்சியாக அமைகிறது. (இவ்வண்ணம் வந்த கட்டுவிச்சியும் தன் பெண்பிள்ளை வீட்டில் புறப்பட, வீட்டிலே தன் சாதிப்பாடு தோன்றச் சில மருந்து கூறித் திரியா நின்றாள்)

காட்சி மாற்றம் நிகழ்கிறது. அடுத்த காட்சியில் தலைவியில் நிலை காட்டப்படுகிறது. ('இது கட்டுவிச்சி நிலைமை. இப்பால் பெண்பிள்ளை பட்டு உடுப்பதும் காறை பூண்பதும் கண்ணாடி காண்பதும் தன் கையில் வளை குலுக்குவதும் கோவைச் செவ்வாய் திருத்துவதும் சிற்றில் இழைப்பதும் சிறு சோறிடுவதும் கூடல் வளைப்பதும்........') தலைவி கூடலிழைத்துப் பார்த்துக் காதல் நோயால் வாடுகிறாள். அருகிருந்த தோழியர், தாயாரைப் பார்த்து வினவ, கட்டுவிச்சியை அழைக்குமாறு அவள் கூறுகிறாள் ('திருச் சேடிமார்களும், தன் பெண்பிள்ளை திருப்படை வீட்டில் புறப்பட வீட்டிலே தன் சாதிப்பாடு தோன்றச் சில மருந்து கூறித் திரியா நின்ற கட்டுவிச்சியை இங்ஙனே அழைத்தார்')கட்டுவிச்சி வருகிறாள். வந்தவள் தாயிடம் நோயின் விவரம் கேட்டுக் கட்டுப்படுத்தி மருந்தும் கூறுகிறாள், மருந்தை உணர்ந்த தாய், தன் மகளைப் பெருமாளின் திருமுன் இட்டு வைத்துக் கூப்பிடத் தொடங்கும் காட்சி மாற்றம் காட்டப்படுகிறது. ('இதனைக்கேட்ட திருத்தாயரும் பெண்பிள்ளையைப் பெரிய பெருமாள் திருவணுக்கன் திருவாசலில் கொண்டுபோய் இட்டு வைத்துக் கூப்பிடத் தொடங்கினாள்') பெருமாளிடம் முறையிட்ட தாய், இறுதியில் தலைவனுடன் தன்மகள் போனாள் என்ற நிகழ்ச்சி முடிவையும் கூறிப்புலம்புவதுடன் அரையர் சேவை முடிகிறது. காட்சிமாற்றப் . நிகழ்ச்சி இயைபு, நிகழ்ச்சித் தொடர்பு, நிகழ்ச்சி முடிவு ஆகிய அனைத்தும்மாந்தர் கூற்று வழியே புலப்படுத்தப்படும் நாட்டுப்புறக் கூத்து மரபு அரையர் சேவையில் இவ்வாறு உள்ளது. பார்வையாளரை மனத்திற்கொண்டு, கலையுடன் அவர்களை ஒன்றுப்படுத்துவதற்காக இப்பாங்கு செயற்படுகிறது.

## உரையாடல் இயைபு

இவ்வறே உரையாடல் இயைபும் காட்டப்படுகிறது, ஒருவர் வினைவ், மற்றவர் மறுமொழி உரைக்க என்று வரும் இயைபு, இடையிடையே சிறுசிறு சொற்களால் காட்டப் படுகிறது. ('இதனைக்கேட்ட திருத்தாயாரும் கட்டுவிச்சியைப் பார்த்து, இந்நோய்க்கு மருந்து சொல், லுவாயாம் என்ன, கட்டுவிச்சியும் இங்ஙனே சொன்னாள்') இதனைக் கேட்ட, என்ன, இங்ஙனே என்ற சிறுசிறு சொற்களால் உரையாடல் இயைபும் தொடர்பும் காட்டப்படுகின்றன. பார்வையாளர்களின் மனநிலைக்கு ஏற்ப நிகழ்வதன் விளக்கம் புலனாகுமாறு இவ்வியைபு அமைகிறது,

## அரங்க அமைப்பு :

அரையர் சேவை நிகழ்வது கோயிலில் உற்சவரின் திருமுன்பு என்று முன்னர்க் கண்டோம். எனவே, பார்வையாளர் மூன்று புறங்களிலும் அமர்ந்து பார்க்கின்ற மரபை இதில் காணலாம். கலைஞர் நடுவில் இருக்க, பார்வையாளர் முப்புறங்களிலும் இருந்து காண்பதால் கலைஞர்-பார்வையாளர் இடையே நெருக்கம் ஏற்படுகிறது. பார்வையாளர் கலையுடன் ஒன்றுகின்றனர். இப்பாங்கு நாட்டுப்புறக் கூத்து அரங்கின் கூறாகும். அரையரின் முத்துக்குறி நிகழ்ச்சியைக் காண வரும் ஆடவரும் பெண்டிரும் பட்டுடுத்தி வருவதைக் காணும்போது, கலையுடன் இணைகின்ற பார்வையாளர்களைக் காணமுடிந்தது.

## பார்வையாளர் ஒன்றுபடல் :

பார்வையாளர் அனைவரும் வேறுபாடின்றிச் சரிசமமாக இருந்து காணும் சனநாயகப் பண்பை நாட்டுப்புறக் கூத்து அரங்கம் வளர்த்தது. தமிழ் மக்களின் பொதுவியல் கூத்தில் காணப்பட்ட இக்கூறை - நாட்டுப்புறக்கூத்து மரபை - அரையர் சேவையில் இன்றும் காணலாம். முத்துக்குறி நிகழ்ச்சியில் அரையர் ஒருவரே தாயாகவும் மகளாகவும் குறத்தியாகவும் மாறிமாறி அபிநயிக்கிறார். தனியாக வேடப்புனைவு ஏதுமின்றி, தம்முடைய அபிநயம் வழி அரையர் இதைச் செய்கிறார். மகள் நிலையில் கூடல்இழைக்கிறார்; தாயாக நின்று மறுகுகிறார்; குறத்தியாகப் பேசுகிறார். மகள் நிலை பற்றித் தாயும் குறத்தியும் பேசும் உரையாடலில் அவர் குரலை ஏற்றி இறக்கிப் பேசுகிறார். மகளைப் பெருமாள் திருமுன் இட்டுவைத்துப் புலம்பும் இடத்தில் மகள் நிலையை எடுத்துப்பேசும் பொழுதில் அரையர் தாம் தாயாக நின்று, தம் கையில் உள்ள பட்டுத்துண்டைப் பெண்ணாகப் பாவித்து அதைக் காட்டிக் காட்டிப் பேசுகிறாள். கலைஞர் கூத்து உருவாக்கத்தில் (production of drama) மேற்கொள்ளும் சிக்கனத்தை இதில் காண்கிறோம், இதே போல், ஒரு தட்டில் அரிசியை பரப்பி அரையர் வைத்திருக்கிறார். மகள் (தலைவி) கூடல் இழைக்கையில் அது தவளமண்ணாகப் பாவிக்கப்படுகிறது. குறத்தி குறி சொல்கையில், அது நெல்லாகப் பாவிக்கப்படுகிறது. பார்வையாளர் கலையுடன் ஒன்றி அபிநயம், உரை வழியே இதனை அந்தப் பொருளாகவே-அரையர் பாவிக்கும்

பொருளாகவுமே-ஏற்கின்றனர். நாட்டுப் புறக் கலை மரபின் கூறு-களில் இதுவும் ஒன்று.

## ஆடல் மரபு

அரையரின் நடனம் பொதுவியல் நெறி சார்ந்தது. இது கேசிமார்க்கம் என்பதில் அமையும். முத்திரை, அடவு, ஜதி, அபிநயம் ஆகியவற்றால் விளக்கும் ஆடற்கலை முறையில் இது அமையும். வேத்தியலாக வளர்ந்த செவ்வியல் நடனம் (classical dance) பொது மக்களை ஈர்ப்பதற்காகக் குறத்தி நடனத்தை ஏற்றது. ஆழ்வார் பாசுரத்திலே - கவிதை நிலையில் நாட்டுப்புறக் கூறு கலந்தது. குறவஞ்சி இலக்கியம் ஆனபோதும் குறத்தி நடனமாகக் செவ்வியல் நடனத்தில் கலந்தபோதும் முறையே சிங்கன்-சிங்கி உரையாடல், குறத்தி வேடப்புனைவு, அபிநயம் ஆகியவைகளில் வழி சிற்றின்பத் தூண்டலாக நாட்டுப் புறக்கலை கொச்சைப்படுத்தப்பட்டது. மாறாக, அரையரின் கலையில் பேரின்பத்தைப் மையமிட்ட-தாக அமைந்து, கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் கலையாகப் பரிணமித்தது. தத்துவக் குறியீடாகக் குறத்திஞானாசிரியனாக இலங்குகிறாள். காணும் கலையாக அரையர் நிகழ்த்தும் போது ஆடல்முறை, புனைவு நிலைகளில் இல்லாதபோதிலும் முற்-கூறிய பல வேறு நிலைகளில் நாட்டுப்புறக் கூறுகள் இயல்பாகக் கலந்தன.

முத்தமிழ் மரபை அரையா பேணி வருகின்றனர். வைணவ ஆலயங்களில் வியாக்யானங்களைக் காலட்சேபமாக எடுத்துரைக்கும் நெறி, வடமொழி, தென்மொழி அறிவுத்திறமிக்க புலமையாளர்க்கு விருந்தாயிற்று. பொதுமக்களுக்கு-எளியமக்களுக்கு காணும்கலையாக -திருஷ்டி காவியமாக- (visual art) அரையர் சேவை வளர்ந்தது. எனவேதான் அது பார்வையாளர் பங்கைப் பெரியதாகப் போற்றும் நெறியை ஏற்று, பொதுவியல் கூத்தாக வளர்ந்தது. இராமாநுசர், எம்பார் போன்ற ஆசாரியர்கள், பார்வையாளர்களாகச் செய்து காட்டிய அபிநயத்திருத்தங்களை ஏற்று வளர்ந்தது.

# சீனாவைப் பற்றிய செய்திகள்

— அசாமி

நூறு கோடி மக்கட் தொகையைக் கடந்துவிட்ட சீனநாடு செஞ்சீனா என்று அழைக்கப்படுகிறது. இந்தியா, எகிப்து, ரோம், கிரீசு போன்ற நாடுகளையொத்து பழம்பெருமையும், தொன்மையும் வாய்ந்தது இந்நாடு. ஆனால் இன்றைய சாதாரண சீனக் குடிமகன் தொன்மையான சீன நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் பற்றி அதிகமாகப் பேசமாட்டான். கடவுளைப்பற்றி சிந்தித்து இகபர வாழ்க்கையின் ஏற்ற இறக்கம் குறித்து தத்துவ விசாரணையில் இறங்கமாட்டான். அவனுக்கு அதற்கு நேரமில்லை நேரம் இருந்தாலும் விருப்பமில்லை. நடைமுறை உலகமே அவனுக்கு முக்கியமானது. வாழ்க்கைப் பிரச்னையை கட்டுப்பாட்டோடு அணுகி காலத்தைக் கடத்தினால் போதும் என்கிற நிலையே அவனுடையதாகும். ஜனநாயகம், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, மந்திரிசபை, அரசியல் விவாதங்கள் ஆகிய அனைத்தும் அவனுக்கு அப்பாற்பட்டதாகும். அவன் ஏதேனும் செய்திப் பத்திரிகையைப் பார்த்தாலும், அதில் அத்தகைய செய்திகள் கிடையாது. அவனுடைய அரசினைப்பற்றி விமர்சிக்கின்ற வெளிநாட்டுப் பத்திரிகைகளை அவன் பார்க்கவே முடியாது. மிகுந்த கட்டுப்பாட்டுடன் கூடியதே அவனது வாழ்க்கை. தனியொரு சீனத்துக் குடிமகனும் விழிப்போடும் கவனத்தோடும் கடமை உணர்ச்சியோடும் இருக்கிறான் என்பது பற்றி வியப்படைய வேண்டியதில்லை. அரசாங்கம் அவனை அந்த நிலைக்கு உட்படுத்தி வைத்துள்ளது. மன்னனைப் போல வாழ்ந்த சியாங்-கே-ஷேக் சீனத்திலிருந்து தப்பியோடி பார்மோசா தீவில் தஞ்சம் புகுந்த காலத்திலிருந்து செஞ்சீன மக்கள் திட்டமிட்ட வாழ்க்கையோடும், குறிக்கோளுடனும் உருவாக்கப்பட்டுள்ளனர். சீனமக்கள் குடியரசு (People's Republic of China) என்பதே சட்டரீதியான தேசியப் பெயர். ஆயினும் மற்ற குடியரசு நாடுகளில் இருப்பதே போன்று இந்நாட்டு மக்களுக்கு உரிமையும், சுதந்திரமும் கிடையாது. எப்போதும் அரசினரின் கண்காணிப்பிலிருந்து தப்பமுடியாது. மிகவும் பெருமையாகப் பேசப்படுகின்ற தனி மனித சுதந்திரம் என்பதைக் கனவிலும் எண்ணிப் பார்க்க முடியாது. பொதுவுடமைவாதிகள் இதனை மிகச் சிறந்த கட்டுப்பாடு (discipline) என்று சொல்வர். ஜனநாயகவாதிகளோ உரிமையெலாம் பறிபோன

அடிமை வாழ்வு என்று விளக்கம் கொடுப்பர். இவற்றில் எது சிறந்தது என்பது சீனத்தைப் பார்க்கின்ற நமது கண்ணோட்டத்தைப் பொறுத்ததாகும். சீன மக்கள் வாழ்க்கை எத்தகையது என்று உய்த்து உணர்தற்கு ஏற்றவாறு கீழ்க்காணும் செய்திகள் கொடுக்கப்படுகின்றன.

குடும்பக் கட்டுப்பாடு ஏறத்தாழ உலகின் எல்லா நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றன. மக்கட்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினாலொழிய மனித சமுதாயத்துக்கு ஒளி மயமான எதிர்காலம் இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். கருத்தடையினை எதிர்த்து வந்த பாகிஸ்தான் போன்ற இசுலாமிய நாடுகளில் கூட அளவோடு கூடிய குடும்பத்தைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு பிரச்சாரம் செய்து வருகின்றனர். நமது நாட்டில் இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் என்பதே விளம்பரப் படுத்தப்பட்டு வருகிறது. சீனாவிலோ குடும்பத்துக்கு ஒரே ஒரு குழந்தை என்பதுதான் அரசினரால் பாராட்டப்படுகின்ற நடைமுறைக் கொள்கை. சீனாவின் ஒரு அங்கமான மங்கோலியாவில் துணி ஆலை ஒன்றில் ஆயிரக்கணக்கான பெண்கள் பணிபுரிந்து வருகின்றனர். வாரத்துக்கு மூன்றுமுறை மாலையில் இவர்கள் பகுதி பகுதியாகப் பிரிந்து குடும்பக் கட்டுப்பாடு பற்றி தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவர். மாதவிலக்கு நின்றுபோன பெண் அந்தச் செய்தியினை ஆலைக்கு அறிவித்து விடவேண்டும். ஆலையின் மருத்துவமனை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். ஒரே ஒரே குழந்தைதான் பெறுவேன் என்ற சொல்லைச் செயற்படுத்தும் மகளிர் பாராட்டும் சான்றிதழும் பெறுகின்றனர்.

ஐந்தாறு ஆண்டுகளாகக் குழந்தையே பெற்றெடுக்காத கிராமங்களை அரசினரே முன் வந்து பாராட்டுகின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரப் பணியில் ஈடுபடுவோரின் பெயர்கள் ஒவ்வொரு ஆலையிலும், தொழில் நிறுவனங்களிலும் பெரிய அளவில் விளம்பரப் படுத்தப்படுகிறது. ஆண் குழந்தை இல்லை; எனவே அது வரை கருத்தடை செய்து கொள்ளாமலிருப்போம் என்கிற எண்ணமே யாருக்கும் ஏற்படுவதில்லை. ஆணோ, பெண்ணோ ஒன்று போதும் என்பதே நாடு முழுவதும் நடைமுறைக் கொள்கையாக இருந்து வருகிறது. மதத்தைக் காரணம் காட்டி இந்தியதியிலிருந்து யாரும் தப்ப

முடியாது. பொருளாதாரக் கண்ணோட்டத்தில் தான் இந்தப்பிரச்னை அணுகப்படுகிறதே தவிர மதத்துக்கு இதில் இடமேயில்லை. ஒரு குழந்தை போதும் என்கிற சித்தாந்தத்தை சீனமக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இந்தக் கொள்கையினை 1979-ஆம் ஆண்டு முதல் சீன அரசாங்கம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கடுமையாகப் பின்பற்றி வருகிறது. நூறு ரூபாய்க்குச் சமமான வருமானம் உடைய தம்பதியினர் இரண்டாவதாக ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தால், அவர்களது வருமானம் தொண்ணூறு ரூபாயாகக் குறைக்கப்பட்டு விடும். குழந்தைப்பேறு என்ற தனிமனித உரிமையில் இவ்வாறு அரசாங்கம் கடுமையாகத் தலையிடுகிறது. அமெரிக்கா, 'இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் குழந்தைப் பேறு என்பது மனித உரிமையாகக் கருதப்படுகிறது. இந்தியாவிலும் பரந்த அளவில் குடும்பக்கட்டுப் பாட்டுக்கென்று விளம்பரமும், பிரச்சாரமும் செய்யப்படுகிறதே தவிர அரசாங்கம் கடுமையாகத் தலையிடவில்லை.

சீனா பொதுவுடமை நாடாக இருப்பதனாலே, அங்குள்ள நிலங்களும், தொழில்களும், வீடுகளும், கடைகளும், உணவகங்களும் அரசாங்கத்துக்குத்தான் சொந்தமானவை. தனிப்பட்ட யாரும் அவற்றின் மீது உரிமை கொண்டாடி, கணிசமாக இலாபம் ஈட்டிப் பொருளைக்குவித்து மாடமாளிகையில் செல்வந்தராக வாழ்கின்றனர் என்ற பேச்சுக்கே இடமில்லை. கம்யூனிச நாடாக வருவதற்கு முன்னர் உடைமைகள் எல்லாம் நமது நாட்டைப்போல் தனிப்பட்டோருக்கே சொந்தமாக இருந்தன. பொது உடமைக் கொள்கை ஆட்சிக்கு வந்த பிறகு ஒவ்வொரு தொழிலிலும் அதன் சொந்தக்காரர்களையும் மாத ஊதியம் கொடுத்து தொழிலாளராக மாற்றி விட்டார்கள். தொழிலை இழந்ததற்கு நஷ்ட ஈடாக திங்கள் தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையும் வழங்கப்படும். இந்தப்பணத்தை மட்டும் அவர் விருப்பம் போல் செலவு செய்து கொள்ளலாம். காலப் போக்கில் அந்தத்தொழில் நிறுவனம் அரசாங்க உடமையாகி விடும். ஒரு காலத்தில் முதலாளியாக இருந்தவரும் தொழிலாளியாகி விடுவார். சீனநாட்டுச் சட்டப்படி தனியொரு மனிதன் இன்னொரு மனிதனை மாத ஊதியம் கொடுத்து எந்தப் பணியிலும் அமர்த்திக் கொள்ள முடியாது.

கடவுள் நம்பிக்கைக்கு கம்யூனிச நாடுகளில் மதிப்புக் கிடையாது. பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் அங்கெல்லாம் கட்டப்பட்டிருந்த ஆலயங்கள், மசூதிகள், மாதா கோயில்கள், புத்த விகாரங்கள் ஆகிய அனைத்தும் பழமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும் வெறும் நினைவுச் சின்னங்கள்தாம். அவற்றுக்கென்று தனிமதிப்பு, பாதுகாப்பு, விழாக்கள், கொண்டாட்டங்கள் ஆகிய எவையும் கிடையாது. சீனாவிலும் இந்த நிலைமை தான் என்பதில் வியப்பொன்றுமில்லை

ஜார்ஜ் பேல்ஸ் எனும் பத்திரிகையாளர் தமது சீனப் பயணத்தின் போது ஷாங்காய் மா நகரத்துக்கு அண்மையிலுள்ள நான்சங் எனும் நகருக்குச் சென்றிருந்தார். அவரை அங்கு அழைத்துச் சென்றவர் சீன அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட ஒரு வழிகாட்டி ஆவார். 1400-ஆண்டுகளுக்கு முந்தியதான ஒரு புத்த விகாரத்தை அந்நகரில் காண விரும்பினார் பேல்ஸ். இவர்கள் இருவரும் ஒரு பழைய காரில் சென்று இறங்கினர். சுற்றுப்புறத்திலிருந்து ஏராளமான மக்கள் கூட்டம கூடி விட்டது. ஆனால் புத்தர் கோவிலுக்குள் அதிகமாக யாரும் இவர்களைப் பின்பற்றி வரவில்லை. பாழடைந்து போன மண்டபம் போலத் தான் அந்தக் கோவில் காட்சியளித்தது. எழுபது வயதுக்கு மேற்பட்ட ஒரு புத்த பிக்கு கோவிலைச் சுற்றிக் காண்பித்தார். விளக்கோ, எந்த அலங்காரமோ அங்கு காணப்படவில்லை. சுருங்கச் சொன்னால் அவ்வளவு பெரிய புத்தர் கோவிலில் மக்கள் நடமாட்டம் இருந்ததாகவே தெரியவில்லை. மத நம்பிக்கையில் அரசாங்கம் தலையிடாது என்று கொள்கையளவில் இருந்தாலும் நடைமுறை வாழ்க்கையில் இறைவழிபாட்டுக்கு சீனாவில் இடமில்லை. புத்தர் சிலையும், கோவிலும் இற்றைக் காலத்துக்குப் பொருந்தாத பழைய காட்சிப்பொருள் என்கின்ற அளவில் கருதப்பட்டு வருகின்றன.

இந்த உலக வாழ்க்கையில் மக்கள் மடிவது திண்ணம். எனவே கண்கூடாகத் தெரிகின்ற இம்மானுட வாழ்க்கையிலேயே நாட்டு மக்களுக்கும் மனித குலத்துக்கும் நல்லனவற்றைச் செய்தல் வேண்டும் என்கிற உணர்வே சீன மக்களிடை பரவலாகக் காணப்படும் கருத்தாகும்.

இருபத்திரண்டு ஆண்டு காலம் (1927—1949) கடுமையான உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக

ஊறிவந்த பிரபுத்துவ முறையினையும், அதன் கொடிய அடக்கு முறையினையும் தகர்த்து எறிந்து மாசேதுங் தலைமையில் பொது உடைமை அரசினைக் கண்ட மக்களுக்கு இறையுணர்வு ஏற்படா-மல் போனதில் வியப்பில்லை. நடைமுறை உலகத்தில் கடுமையான ஏற்றத் தாழ்வுகள் இருப்பதைக் கண் கூடாகப் பார்த்து, அதனை நிவர்த்தி செய்யாமல் 'எல்லாம் கடவுள் செயல்' என்றெ-ண்ணுகின்ற வேதாந்தத்தை சீனமக்கள் நம்புவதில்லை.

முற்றுமாகவே சீனர்களுக்கு இறையுணர்வு ஏற்படாமல் போனதற்கு வேறொரு இன்றியமையாத காரணமும் உண்டு. நிலப்பிரபுகளிடம் ஏழை வேளாண் மக்கள் அடைந்த இன்னல்கள் ஏராளம். பரம்பரையாகவே உழுது பயிரிடுகின்ற உழவர்கள் நிலப்பிரபுவுக்கு நூறில் எழுபது பங்கு விளைச்சலைத் தரவேண்டும். வானம் பொய்த்தோ வளம் குன்றியோ விளைச்சல் பொய்த்து விட்டாலும் அல்லது குறைந்த மகசூல் கண்டாலும், நிலப்பிரபுவுக்கு உரிய தொகை-யினைக் கொடுத்தேயாக வேண்டும். அதாவது கடன் வாங்கிக் கொடுக்க வேண்டும். இதனை எதிர்த்தால் பலர் முன்னிலையில் அவன் தலை போய்விடும். இந்த சமூக அமைப்பில் மிகவும் குறைந்த தண்டனை என்ன தெரியுமா? இரத்தத்தை உறிஞ்சும் அட்-டைகள் நிரப்பிய நீர்த்தொட்டியில் ஏழைக்குடியானவன் கழுத்தளவு நீரில் தள்ளப்படுவான். சீனப்புரட்சிக்கு முன்னர் இந்த நிலை இருந்தது. எனவே இதனை ஒழிக்கப்பாடுபட்ட மாசேதுங் கண்கண்ட கடவுளாகப் போற்றப்பட்டார். இன்னொரு உண்மையினையும் நாம் மறந்துவிடக்கூடாது. இந்த அளவு உழவர் பெரு மக்கள் இன்ன-லுறாத நாடுகளில் பொதுவுடைமைக் கருத்துக்கள் பூத்துக்குலுங்க முடியவில்லை என்பதே அந்த உண்மை. இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா (U. S. A.), பிரான்சு, கனடா போன்ற ஜனநாயக நாடுகளில் எவ்வளவுதான் முயன்றாலும், பொதுவுடமைக் கருத்து-கள் முற்றுமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதையும் எண்-ணிப்பார்க்க வேண்டும்.

— தொடரும்.

# வெள்ளைக்கார சாமி கதை - ஓர் திறனாய்வு

டாக்டர் ஏ. ஆதித்தன்,

இலண்டன் மாநகரத்தினைச் சார்ந்த வெள்ளைக்காரர் ஒருவரைத் தெய்வமாகக் கருதி மக்கள் வழிபாடு செய்து வருவதனைக் குமரி மாவட்டத்திலுள்ள பூவியூர், பூஜைப்புரை விளை, சமாதானபுரம் என்னும் மூன்று ஊர்களிலும் காணமுடிகின்றது. இவ்வழிபாட்டினைச் சுட்டும் வகையில் 'வெள்ளைக்கார சாமி கதை, என்னும் பெயரில் கதைப்பாடல் ஒன்று காணப்படுகின்றது. இக்கதைப்பாடல் செய்தியினை ஆய்ந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'வெள்ளைக்கார சாமி கதை' என்னும் கதைப்பாடல் இப்போது அச்சு வடிவில் சில மாற்றங்கள் செய்யப் பெற்று வெளி வந்துள்ளது.[1] இன்னமும் இக்கதைப் பாடலைப் பற்றிய செய்திகளைச் சில வார இதழ்களும் வெளியிட்டுள்ளன.

ஈண்டுக் குறிப்பிடப் பெற்ற மூன்று ஊர்களிலும் சிவன் கோவிலில்தான் வெள்ளைக்கார சாமிக்கு வழிபாடு நடைபெறுகின்றது. பூவியூரில் மட்டுமே சிவன் கோவிலுக்கு அருகாமையில் வெள்ளைக்கார சாமிக்கெனத் தனியாகக் கோவில் அமையப் பெற்றுள்ளது. ஏனைய இரு ஊர்களிலும் வெள்ளைக்கார சாமிக்குச் சிறிய பீடமே அமைந்துள்ளது. பூவியூரில் காணப்பெறும் வெள்ளைக்கார சாமி கோவிலே ஏனைய ஊர்களில் காணப்படுவதினின்றும் பெரிதாகக் காணப்படுகின்றது.

---

1. பெருமாள், ஏ. என்., வெள்ளைக்கார சாமி கதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983,

சிவாலயத்தில் தை மாதம் திருவிழா நடைபெறும் போது தான் வெள்ளைக்கார சாமிக்கும் விழா நடைபெறுகின்றது. வெள் ளைக்கார சாமிக்கு அங்கி, தொப்பி, மரவெடி, சுருட்டு, மது, இறைச்சி போன்றவை படையலாக வைக்கப்படுகின்றன. வெள்ளைக் கார சாமியின் கதையினை திருவிழாவின் போது வில்லில் பாடும் போது வெள்ளைக்கார சாமியாக ஒருவர் தெய்வமுற்று ஆடுகின்-றார். இவருக்கு வெள்ளைக்காரனுக்குரிய ஆடைகள் அணிவிக்கப் பெறுகின்றன. ஆங்கிலம் தெரியாத இவர் தெய்வமுற்ற நிலையில் ஆங்கிலம் பேசுகின்றார்.

**கதைப்பாடல்**

வெள்ளைக்கார சாமி கதை நாட்டுப்புறப் பாடலின் கூறுகள் பலவற்றினைக் கொண்ட ஒரு கதைப் பாடலாகும். இரண்டு காப்புச் செய்யுட்களைத் தொடர்ந்து ஆசிரியர் குறிப்பு, கதைப் பாடல் பாடப்பெற்ற காலம், கதைப்பகுதி ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. வில்லில் நாண் தெறித்துப் பாடுவதற்கு ஏற்ற முறையில் மிகவும் எளிமையாக இக்கதைப்பாடல் அமைந்துள்ளது.

**ஆசிரியர்**

பூவியூர் கிராமத்தினைச் சார்ந்த திரு. முத்தையா என்பவரே இக்கதைப் பாடலாசிரியர். 1968-ஆம் ஆண்டு இயற்கை எய்திய இவரது வழித்தோன்றல்கள் இப்போது தூத்துக்குடியில் வசித்து வருகின்றனர். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து ஏழ்மையாக வாழ்ந்து. ஏழ்மையிலேயே இவ்வுலக வாழ்வினின்றும் நீங்கியவர் இவர்.

**கதையின் ஏடும் காலமும்**

வெள்ளைக்கார சாமி வழிபாடு உடைய மூன்று கிராமங் களிலும் இக் கதையின் ஏடு காணப்பட்டது. இவை மூன்றும் மூலப்-பிரதியின் நகல்களே. இப்போது சமாதான புரத்தில் மட்டுமே இவ்வேடு இருக்கின்றது.

கதைப்பாடல் எழுதப்பெற்ற காலம் பற்றிய செய்தி காப்புச் செய்யுளின்கண் காணக்கிடைக்கின்றது. தமிழுக்கு ஆயிரத்து நூறாம் ஆண்டு வைகாசித் திங்கள் இருபத்தொன்பதாம் நாள்

வியாழக்கிழமை பஞ்சமி கூடிய ஓணநாளில் இக்கதையினைப் பாடியதாக ஆசிரியர் குறிப்பிடுவதால் இந்நாளில்தான் இக்கதை அரங்கேற்றம் செய்யப்பட்டிருக்கலாம். ஆசிரியர் குறிப்பிடும் காலம் ஆங்கில ஆண்டு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தைந்துக்கு இணையாக அமையும். தமக்கு முன்னமே வாய்மொழியாக வழங்கிய ஒரு கதைக்கு ஆசிரியர் வரிவடிவம் கொடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

வட்டார வழக்குச் சொற்கள் பலவற்றைக் கொண்டு மிகவும் எளிமையான வாக்கியங்களால் ஆகிய இக்கதைப்பாடலின் பல வாக்கியங்கள் இலக்கணப் பிழையுடையன. சந்திப் பிழைகளும் மிகுதி.

கதையின் செய்தி

இலண்டன் மாநகரத்தைச் சார்ந்த ஒரு வெள்ளைக்காரத் துரையும், அவரைச் சார்ந்தவர்களும் வாணிபம் செய்வதன் பொருட்டு, ஒரு கப்பல் செய்ய எண்ணுகின்றனர். இக்கப்பலுக்கு உரிய மரங்களைக் குமரி மாவட்டத்திலுள்ள காக்காச்சி மலையில் வெட்டுகின்றனர், பின்னர், கொடிமரத்திற்கு ஏற்ற மரத்தினைத் தேடி, செங்கிடாய்க்காரன் என்னும் காவல் தெய்வம் உறைகின்ற மரத்தினை வெட்டி எடுக்கின்றனர்.

கப்பல் வேலை முழுமையாக முடிகிறது. டோவர் ஜலசந்தியில் கப்பலை நீரோட்டம் பார்க்கின்றனர். பின்னர் அக்கப்பல் பல்வேறு நகர்கள், தீவுகள், கடல்களைக் கடந்து இறுதியாக இந்தியாவில் கேரள மாநிலத்தின் மேலைக் கடலோரப் பகுதியில் அமைந்துள்ள காயாங்குளம் துறைமுகத்தை வந்தடைகின்றது.

வெள்ளைய வணிகர்கள் காயாங்குளம் துறைமுகத்தில் பல்வேறு வகையான பொருட்களையும் கொண்டுவந்து கப்பலில் ஏற்றி மீண்டும் இலண்டன் மாநகரத்தை நோக்கிச் செல்கின்றனர். கன்னியாகுமரிக்கு அருகாமையிலுள்ள தவிட்டுத்துறை என்னுமிடத்தில் கப்பல் செல்லும்போது கடலுள் மூழ்கிவிடுகிறது. செங்கிடாய்க்காரன் உறையும் மரத்தைக் கப்பலின் கொடிமரத்திற்காக வெள்ளையர்கள் வெட்டிவிட்டதன் காரணமாகக் கோபங்

கொண்டு அவனே அந்தக் கப்பலை கடலுக்குள் ஆழ்த்திவிடுகின்றான் என்று கூறப்படுகிறது.

பின்னர், தவிட்டுத்துறையில் செங்கிடாய்க்காரனுக்கு வழிபாடு நிகழ்கையில் வெள்ளயரே தங்கள் தவறினை உணர்ந்து ஆவி உருவில் வந்து அவனை வேண்டி நிற்கின்றனர். இதன் காரணமாகச் செங்கிடாய்க்காரன் மனமுவந்து பல்வேறு வரங்களை வெள்ளையருக்கு வழங்குகின்றான்.

இதுவே கதைப் பாடலின்படி கிடைக்கப்பெறும் கதையாகும். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு வெள்ளைக்காரர்களுக்கும் ஈண்டுக் குறிக்கப் பெற்ற மூன்று ஊர்களில் வழிபாடு நடைபெறுவதாகத் தெரியவருகின்றது.

## கதையின் காலம்

இக்கதையில் குறிப்பிடப் பெறும் பறங்கித்துரை என்னும் வெள்ளைக்காரன் இலண்டன் மாநகரத்தினைச் சார்ந்தவன் என்பது தெரியவருவதால் இந்நிகழ்ச்சி கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்துள்ளது எனக் கருதலாம். பதினெட்டாம் நூற்றாண்டில்தான் ஆங்கிலேயர்கள் தென்மாநிலங்களுக்கு வருகை தந்துள்ளனர் என்பது வரலாற்றுண்மை.

பறங்கியர்கள் என்னும் சொல் முதலில் போர்த்துக்கீசியர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பெற்ற போதிலும் பிற்காலத்தில் இந்தியர்கள் அல்லாத பிறநாட்டவர்களைக் குறிக்கவே பயன் படுத்தப் பெற்றுள்ளது.

## முரண்பட்ட கதை

கதைப்பாடல் சுட்டும் செய்திகளுக்கும் வழிபாடு நடைபெறும் கிராமங்களிலிருந்து சேகரிக்கப்பெற்ற செய்திகளுக்குமிடையே மிகுந்த வேறுபாடு காணப்படுகின்றது.

வெள்ளைக்கார சாம வழிபாடு நடைபெறும் மூன்று கிராமங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்த இடம் பூவியூர் என்ற

கிராமமாகும். இங்கு மட்டுமே வெள்ளைக்கார சாமிக்கெனத் தனி-யாக ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் வரலாறுதான் கதைப்பாடலின் செய்தியினின்றும் முரண்படும் வகையில் அமைந்-துள்ளது.

பூவியூர் கிராம மக்கள் அனைவருமே கதைப் பாடல் செய்திக்குப் புறம்பான ஒரு கதையினைக் கூறுகின்றார்கள்.

இம்மக்களிடமிருந்து சேகரித்த செய்தியின்படி பறங்கித்துரை கப்பலின் கொடிமரத்திற்காகச் செங்கிடாய்க்காரன் உறையும் மரத்தினை வெட்டியதாகவும், இதனால் கோபங்கொண்ட செங்கிடாய்க்காரன் பறங்கித்துரையினைப் பழிவாங்கியதாகவும் தெரியவருகின்றது.

கொடிமரத்தினைப் பறங்கித்துரை வெட்டியதன் காரணமாகக் கோபங் கொண்டிருந்த செங்கிடாய்க்காரன் அவனைப் பழிவாங்கத் தக்க தருணம்பார்த்திருந்தான். ஒரு நாள் பறங்கித்துறை பூவியூரி-லுள்ள சிவன் ஆலயத்தின் அருகாமையில் குதிரையில் வரும்போது செங்கிடாய்க்காரன் அவனைப் பழிவாங்கி விடுகின்றான்.

சிவனாலயத்தின் அருகே வந்ததும் திடீரெனத் தன்நெஞ்சிலே அடி விழுந்தவுடன் ஒன்றும் புரியாமல் குதிரையிலிருந்து கீழே விழுகின்றான் பறங்கித்துரை. அப்போது தன்னை மரணம் நெருங்கிக் கொண்டிருப்பதனையும் அவன் நன்கு உணர்ந்து-விடுகின்றான்.

தனக்கு எப்படி இந்நிலை ஏற்பட்டது என்பதனைப் புரியாது வருந்திக்கொண்டிருக்கும் வேளையில் பறங்கித்துரைக்குச் செங்கிடாய்க்காரன் காட்சி கொடுக்கின்றான். சூழலைப் புரிந்து கொண்ட பறங்கித்துரை தன்னுடைய தவறினை உணர்ந்து செங்கிடாய்க்காரனிடம் மன்னிப்புக்கோருகின்றான். மனமிரங்கிய செங்கிடாய்க்காரன் பறங்கித்துரையினை மன்னித்துத்தக்க உதவிகள் செய்வதாக வாக்களிக்கின்றான். அதன் பின்னர், பறங்கித்துரை மரணமடைகின்றான். அன்றிரவு பூவியூர் மக்களின் கனவில் செங்கிடாய்க்காரன் தோன்றி நிலைமையினை உணர்த்தி, பறங்கித்துரைக்குத் தன்னுடைய ஆலயத்தின் பக்கத்திலேயே வழிபாடு நடத்துமாறு கேட்டுக் கொள்கின்றான்.

இதன்படி மக்கள் பறங்கித்துரையினைச் செங்கிடாய்க்காரன் ஆலயத்திற்குத் தென்புறத்தில் சுமார் இருநூற்றைம்பது அடிகளுக்கு அப்பால் அடக்கம் செய்து, அதிலே ஒரு ஆலயமும் எழுப்பி வழிபாடு செய்துவருகின்றனர்.

வாய்மொழியாகப் பெறப்பட்ட வெள்ளைக்கார சாமி கதைக்கும், கதைப்பாடலில் சுட்டப்பெறும் கதைக்கும் பெருத்த வேறுபாடு காணப்படுவதால் இதனை ஒரு முரண்பட்ட கதை எனலாம்.

## எது உண்மைச் செய்தி?

கதைப்பாடலில் செய்தி தெளிவாக அமையப் பெற்றிருக்கும் போது ஏன் வாய்மொழிச் செய்தியினைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்ற வினா எழலாம். வாய்மொழிச் செய்திதான் உண்மைச் செய்தியாக இருக்க முடியும் எனும் அளவிற்குச் சான்றுகள் சில கிடைக்கப்பெற்றுள்ளன.

பூவியூர் கிராமத்தில் காணப்பெறும் வெள்ளைக்கார சாமி ஆலயம் ஒருவரின் கல்லறையின்மீது எழுப்பப் பெற்றுள்ளது. இந்த ஆலயத்தினைப் புதுப்பிக்கும் முயற்சி நடைபெறுகையில் அங்குள்ள கல்லறையினை மக்கள் அனைவரும் நேரில் பார்த்துள்ளனர். ஈண்டு வெள்ளைக்காரர் ஒருவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பது தெரியவருகின்றது.

இதனை அரண் செய்யும் வகையில் பூவியூருக்கு அண்மையிலுள்ள தென்தாமரைகுளம் என்னும் கிராமத்தின் உப்பளத்திற்குள் சிதைந்த நிலையில் காணப்பெறும் ஒரு கல்வெட்டு அமைந்துள்ளது. இக்கல்வெட்டில் வெள்ளையர் ஒருவர் குதிரையிலிருந்து விழுந்து மாண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

## கதை அன்று வரலாறு

வெள்ளைக்கார சாமி கதை உண்மைச் சம்பவமல்ல; ஒரு புனை கதையே எனும் கூற்று பொருத்தமுடைத்தன்று.

வெள்ளைக்காரரும் அவருடைய கூட்டத்தாரும் பாறைகள் அதிகமாகக் காணப்படும் கடற்கரைப் பகுதியாகிய கன்னியாகுமரி-

யை அடுத்து அமைந்துள்ள மன்னத்தேவன் பாறைக்கு அருகா-மையில் கப்பலில் வரும்போது எதிர்பாராத் விதமாகக் கப்பல் உடைந்து மாண்டு விடுகின்றனர். இந்த விபத்திற்கு இப்பகுதிக்கு அருகாமையில் குடிகொண்டிருக்கும் செங்கிடாய்க்கார' சுவாமிதான் காரணம் என மக்கள் நினைந்து இவ்வாறு ஒரு கதையினைப் புனைந்துள்ளார்கள் என்ற கருத்துப் பொருளற்றதாய் அமைந்து விடுகின்றது.

பூவியூரில் மரணமடைந்துள்ள வெள்ளைக்காரத் துரையை மக்கள் நல்லடக்கம் செய்து வழிபாடு செய்கின்றனர் என்பதாலும் தென்தாமரைகுளம் கல்வெட்டு இதனை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளதாலும் வெள்ளைக்கார சாமி கதையினை ஒரு வர-லாற்று நிகழ்ச்சியாகத்தான் கருதுதல் இயலும்.

## ஏன் வேறுபாடு?

பூவியூரில் நடந்த நிகழ்ச்சி இவ்வாறு அமையுமாயின் பூவியூரில் பிறந்து வளர்ந்த திரு. முத்தையா என்பவர் இந்நிகழ்ச்சிக்குப் புறம்பாக மன்னத்தேவன் பாறைக்கு அருகாமையில் பறங்கித்துரை செங்கிடாய்க்காரனால் பழி வாங்கப் பெற்றான் என ஏன் கதைப் பாடலை அமைக்க வேண்டும் என்ற ஐயம் எழுகின்றது.

வெள்ளைக்கார சாமி கதை முன்னர் வாய்மொழியாகப் வழங்கப்பெற்று வந்ததெனவும் திரு. முத்தையா அவர்கள் தம் காலத்தில் பொரும்பான்மையோரிடையே நிலவிவந்த அமைப்-பினையே கதைப்பாடலில் தந்துள்ளார் எனவும் கருத இடமுண்டு.

வெள்ளைக்கார சாமியின் அடிப்படைக் கதை நிகழ்ச்சி பூவியூரில் நடைபெற்றிருக்கலாம். அதனை வேறுவேறு இடங்களில் வேறுவேறு வகையாக வழங்கியிருக்கலாம்; இறுதியில் அடிப்படை நிகழ்ச்சியினை விடவும் கதைப்பாடலில் சுட்டப்பெறும் வகைக்கதை-யே பெரிதும் வழங்கி வந்தமையால் ஆசிரியர் இந்நிகழ்ச்சியினுக்கு வடிவம் கொடுத்திருக்கலாம்.

## மையக்கருத்து

கிறித்தவ மதத்தினைச் சார்ந்த ஒருவர் பூவியூரில் மரண-மடைந்திருக்கின்றார். அவர்செங்கிடாய்க்காரன்ஆலயத்தின் அருகா-மையில் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கின்றார். அவருக்குத் தை

மாதத்தில் வழிபாடு நடைபெறுகின்றது. இவர் ஒரு வெள்ளைக்காரர் எனக் கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது,

எவ்விதக் காரணமும் இன்றி இறந்த ஒரு கிறித்தவரை இந்து ஆலயத்திற்கு அருகாமையில் அடக்கம் செய்து வழிபடுதல் இயற்கைக்குப் புறம்பானது. ஏன் இவ்வெள்ளைக்காரருக்கு வழிபாடு நடைபெறுகின்றது? செங்கிடாய்க்கார சுவாமியால் தண்டிக்கப் பெற்றதாலா?

இந்து, கிறித்தவர் வேறுபாடு காரணமாக, சிறுதெய்வ நிலை எய்திய செங்கிடாய்க்காரன் என்பவன் பறங்கியனைக் கொன்றிருக்கலாம்; ஆங்கிலேய அரசின் தண்டனை கருதி தெய்வம் வெள்ளைக்காரனைக் கொன்றுவிட்டதாகக் கூறியிருக்கலாம். அதற்கேற்ப வழிபாடு தோன்றியிருக்கலாம். அன்றி, பூவியூரைச் சார்ந்த மக்கள் பறங்கித்துரையினைக் கொன்று தண்டனையிலிருந்து தப்பிக்க செங்கிடாய்க்கார சாமி தண்டித்துவிட்டதாகக் கூறியிருக்கலாம்.

வாணிபத்தின் பொருட்டு பூவியூர் கிராமப் பகுதிகளுக்கு வெள்ளைக்காரர்கள் வந்தமைக்கு எவ்வித சான்றுகளும் இல்லை. ஈண்டுக் குறிப்பிடப்பெறும் பறங்கித்துரை கிறித்தவமிஷனரியினைச் சார்ந்தவராக இருத்தல் இயலும். 1818-ஆம் ஆண்டு இதற்கு அண்மையிலுள்ள கிராமமாகிய தென்தாமரைகுளத்தில் ரிங்கல் டோப் என்பவர் பெரும்பான்மையான இந்துக்களைக் கிறித்தவ மதத்திற்கு மாற்றியுள்ளார். பறங்கித்துரை இவரது கூட்டத்தினைச் சார்ந்தவராக இருக்கலாம்.[4] அரசு தண்டனைக்குப் பயந்த மக்கள் வெள்ளைக்கார சாமி வழிபாட்டினைத் துவங்கியிருக்கலாம். வழிபாட்டின் போது தெய்வமுற்று ஆடுபவருக்குப் பாதிரிமார்கள்

4. வெள்ளைக்காரர் ஒருவர் பல ஆண்டுகளுக்கு முன்பாக பூவியூரில் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்னும் புகாரின் அடிப்படையில் 1880 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு இக்கிராமத்திற்கு ஒரு விசாரணைக் குழுவினை அனுப்பியுள்ளது. இக்குழு பூவியூர் கிராமத்திற்கு வருகை தந்த போது வெள்ளைக்காரர் ஒருவருக்கு வழிபாடு நடைபெறுதல் கண்டு அதனைத் தொடர்ந்து நடத்தும்படி கேட்டுள்ளது (தகவலாளர் செய்தி).

அணியும் அங்கியினையே அணிவிப்பது பறங்கித்துரை கிறித்தவ மிஷனரியைச் சார்ந்தவர் எனக் கருத இடமளிக்கின்றது.

### கதைப்பாடல் புனை கதையே

கதைப்பாடலில் வெள்ளைக்காரர்கள் இலண்டனிலிருந்து கப்பல் செய்யத் தமிழகம் வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கப்பலுக்குரிய மரங்களை வெட்டிய பின்னர் இவர்கள் இலண்டன் மாநகரம் சென்று தமிழ்நாட்டிலுள்ள தச்சர்களைக் கொண்டு கப்பல் செய்கின்றார்கள். கப்பலுக்குக் கொடிமரம் கிடைக்கவில்லை. மீண்டும் தமிழ் நாட்டிற்கு வந்து காக்காச்சி மலையிலே கொடி-மரத்திற்குரிய மரத்தினை வெட்டி வண்டியில் எடுத்துச் சென்ற-தாகக் கூறப்பட்டுள்ளது.

கப்பலில் கொடிமரத்தினை அமைத்த பின்னர் இலண்டனி லிருந்த காயாங்குளம் துறைமுகம் வந்தடைகின்றனர். காயாங்குளம் துறைமுகத்தில் பொருட்களை ஏற்றி மீண்டும் இலண்டன் மாநகரம் செல்ல வேண்டிய அவ்வெள்ளைய வணிகர்கள் வந்த வழியே இலண்டன் மாநகரம் செல்லாமல் கன்னியாகுமரி வழியாக செல்வதாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது.[5]

இலண்டன் செல்லும் வழியில் கன்னியாகுமரிக்கு அருகாமை-யிலுள்ள தவிட்டுத் துறையில் செங்கிடாய்க்காரனால் வெள்ளை-யர்கள் வதைக்கப்பெற்றதாகச் செய்தி காணப்படுகின்றது.

கதைப்பாடலின் ஆசிரியர் இலண்டனுக்கும் காயாங்குளத்திற்-குமிடையே தனக்குத் தெரிந்த அனைத்து வெளிநாடுகளின் பெய-ரினையும், கடல்கள், ஜலசந்தி ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றார். இவற்றுள் சில பொருந்துமாறு அமையவில்லை.[6]

---

5. இலண்டனிலிருந்து காயாங்குளம் துறைமுகம் வந்தடைந்த கப்பல் கன்னியாகுமரி செல்லத் தேவையில்லை. கன்னியாகுமரி வழியாக இலண்டன் செல்வதற்குச் சாதகமான வழி இல்லை,
6. இலண்டனுக்கும் காயாங்குளத்திற்குமிடையே ஆசிரியர் சுட்டும் இடங்கள் சில பொருந்துமாறு அமையவில்லை. ஆசிரியர் தமக்குத் தெரிந்த பல இடங்களை இவ்விரண்டு இடங்களுக்-கும் இடைப்பட்ட பகுதிகளாகக் குறிப்பிடுகின்றார்.

இக்கதைப் பாடலில் செய்திகள் அனைத்தும் புனைந்துரைக்கப்பட்டுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

பறங்கித்துரையினைத் தன்னுடைய கிராமத்து மக்கள் கொன்று விட்டதாகக் கதைப்பாடல் எழுதினால் ஆங்கிலேய அரசின் தண்டனையிலிருந்து தப்பமுடியாது என்பதனை அறிந்த ஆசிரியர் இந்நிகழ்ச்சியினை மையமாகக் கொண்டு ஒரு கற்பனைக் கதையினைப் புனைந்துள்வார் என்பதே பொருத்தமுடையது.

திருவெண்காட்டுப் பதிகம்

(i) கண்காட்டும் நுதலானுங் கனல் காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடை காட்டும் கொடியானே.

(ii) பண்மொய்த்த இன்மொழியாள் பயமெய்த மலையெடுத்த
உண்மத்தன் உரநெரித்தன் றருள்செய்தா னுறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடன் முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண் டிசைமுரலும் வெண்காடே.

(iii) தண் மதியும் வெய்யரவும் தாங்கினான் சடையினுடன்
ஒண் மதிய நுதலுமையோர் கூறுகந்தா னுறைகோயில்
பண் மொழியால் அவன்நாமம் பலவோதப் பசுங்கிள்ளை
வெண் முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும்
வெண்காடே

— சம்பந்தர் தேவாரம்

# உயிர் வாழ்க்கையும் பரிணாம வளர்ச்சியும்

டாக்டர். பெ. மெய்யப்பன்

பூமியில் வாழும் எல்லா உயிரினங்கட்கும் சூரியனே ஆதாரம். மக்கள் விலங்குகள், தாவரங்கள் ஆகிய அனைத்துப்பிரிவுகளும் உயிர் வாழ்ந்து கொண்டிப்பதற்கு சூரியன இடையறாது நல்கும் ஆற்றலே காரணம். ஒவ்வொரு நாளும் மௌனமாய்க்கிழக்கே உதித்து மேற்கே மறையும் சூரியன் இல்லாவிட்டால் ..........?

அதை நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. சூரியன் இல்லையாயின். இவ்வுலகில் புல் பூண்டு இல்லை; உயிர் வாழ்க்கை இல்லை; மனித இனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆஸ்திரேலிய விஞ்ஞானி ஒருவர் சூரியனும் நம்மைப் போல வேலை நிறுத்தம் செய்து வேடிக்கையாக உதிக்க மறுத்து விட்டால் என்னவாகும் என்று கணக்குப் போட்டுப் பார்த்தார். அவருடைய ஆராய்ச்சி முடிவுகள்: 48 மணி நேரத்தில் பூமியின் வெப்பநிலை உறைபனி வெப்பநிலைக்கு கீழே 60 டிகிரி சென்டி கிரேடாகக் குளிர்ந்து போகும்; சுமார் 12 நாட்களில் பூமியின் வளி மண்டலத்தில் உள்ள எல்லா வாயுக்களுமே உறைந்து போகும் என்பது தான். பூமியிலிருந்து சுமார் 15 கோடி கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சூரியன் உமிழும் ஆற்றலில் நூறு கோடியில் ஒரு பங்குதான் பூமியை வந்தடைகின்றது. இந்த நுண்ணிய அளவு ஆற்றல்தான் பூமியில் நடைபெற்ற பல வியத்தகு செயல்களுக்குக் காரணமாய் இருநதிருக்கின்றது; இன்றைக்கு நடைபெற்று வரும் பல செயல்களுக்கும் மூலமாய் இருக்கின்றது என்பதை அறியும் போது பெரும் வியப்பே மேலிடுகின்றது.

நாம் உயிர் வாழ உணவு தேவை. தாவரங்களோ சூரிய ஆற்றவினால் ஒளிச்சேர்க்கை மூலம் உணவு உற்பத்தி செய்கின்றன. நீர் மற்றும் நிலப் பரப்பு குளிர்ந்து உறைந்து போகாமலும் அல்லது சூடாகி உருகி விடாமலும் பூமியின் வெப்பநிலை ஒரு சமநிலையில் இருப்பதற்கு சூரியன்தான் காரணம். காற்று வீசுதல், மழை பொழிதல் போன்றவை கூட சூரியன் செயற் படுத்தும் காரியங்கள்தாம். சுருங்கச் சொன்னால், சூரியனின்

ஆற்றலினாலேயே நமக்கு உண்ண உணவும், குடிக்க நீரும் சுவாசிக்கக்காற்றும் கிடைக்கின்றன. சூரிய ஆற்றலினால் எத்துணையோ பயன்கள் நேற்றும் இன்றும் விளைந்திருக்கின்றன; நாளையும் விளையும் என்பதில் ஐயமில்லை. சூரிய ஆற்றலின் பயன்களுள் தலையாயது உலகில் உயிரினங்களின் தோற்றமும் அதன் பரிணாம வளர்ச்சியும் தான்.

பால் வழி மண்டலத்தில் (milky way) உள்ள சூரியனுக்கு 9 கோள்கள் உள்ளன. அவைகள் சூரியனிலிருந்து வெவ்வேறு தொலைவுகளில் குறிப்பிட்ட சில சுற்றுப் பாதைகளில் சுற்றிவருகின்றன. அவைகள் புதன் (mercury), வெள்ளி (venus), பூமி Earth), செவ்வாய் (Mars), வியாழன் (Jupiter), சனி (saturn), யுரேனஸ் (uranus) நெப்டியூன் (Neptune) புளுட்டோ (Pluto) என்ற வரிசையில் இயங்குகின்றன.

ஒவ்வொரு விண்மீனுக்கும் சிலப்பல கோள்கள் இருக்கலாம் என்பதாலும் இப் பிரபஞ்ச வெளியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் இருக்கின்றன என்பதாலும் இப் பிரபஞ்ச வெளியில் உயிரினம் வாழக்கூடிய சூழ்நிலை பூமியைத்தவிர வேறு கோள்களிலும் இருக்கலாம். எனினும் சூரிய மண்டலத்தில் பூமியில் மட்டுமே உயிரினம் உள்ளது என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது. உண்மையில் இது இவ்வுலகம் பெற்ற தவப்பயன் என்றுதான்கூற வேண்டும். ஏனென்றால் பூமிக்கு அருகில் இருமருங்கிலும் உள்ள கோள்களான வெள்ளியிலும் சரி, செவ்வாயிலும் சரி, உயிரினம்வாழக் கூடிய சூழ்நிலை ஒரு சிறிதும் இல்லை. ஏனிந்த பாரபட்சம்? நமக்குக் கிடைக்கும் சூரிய ஆற்றலை வெள்ளியும், செவ்வாயும் மற்றும் பிற கோள்களும் பெற்றாலும் அங்கு உயிரினத்தோற்றம் ஏற்படாதது ஏன்? இதற்கெல்லாம் காரணம் சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள மிகப் பொருத்தமான தொலைவு தான்.

சூரியனுக்கு ஓரளவு அருகாமையிலுள்ள புதன், வெள்ளி, செவ்வாய் போன்ற கோள்களை புவியொத்த கோள்கள் (Terrestrial planets) என்பார்கள். ஏனென்றால் இவை நமது பூமியைப் போலக் கடினமான உள்ளகத்தையும் மெல்லியதாக ஒரு வளி மண்டலத்தையும் பெற்றிருக்கின்றன. ஆரம்ப காலத்தில், அதாவது பலகோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் பூமியும் பிற

புவியொத்த கோள்களைப் போல மெல்லிய வளி மண்டலத்தையே பெற்றிருந்தது. மெல்லிய வளி மண்டலத்தை மிக எளிதாக ஊடுருவிச் செல்வதால், சூரிய ஒளி அப்பொழுது ஓரளவு தாராளமாக கோள்களின் பரப்பில் விழுந்து கொண்டிருந்தது. அதனால் அக்கோள்களில் உள்ள ஹைட்ரஜன் வாயு வெப்ப இயக்கத்தினால் ஈர்ப்பையும் மீறி வெளியேறிவிட்டன.

வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் போன்ற கோள்களை பூதமொத்த கோள்கள் (Giant planets) என்பார்கள். இவை பெரும்பாலும் மிகச் சிறிய அளவுள்ள கடின உள்ளகத்தையே பெற்றிருக்கின்றன. அதிகத் தொலைவின் காரணமாக கோள்களின் சராசரி வெப்பநிலை மிகக்குறைவாக இருக்கும். ஏறக்குறைய காற்றும் உறைந்து போனதால் அங்கு வளி மண்டலம் இருப்பதற்கே வழி இல்லை. (புளூட்டோ இதற்கு மாறாக கடின உள்ளகத்தைப் பெற்றிருக்கின்றது. இது புவியொத்த கோள் ஒன்றின் துணைக் கோளாக இருந்து வழிதவறி தப்பிச் சென்று கோளாக மாறியிருக்கலாம் என்று நவீன வானவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.)

பொதுவாக பூமியிலும், பூமி யொத்த கோள்களிலும் உள்ள வளி மண்டலத்தில் ஹைட்ரஜனின் அளவு அன்றும் இன்றும் குறைவாக இருந்து வந்திருக்கின்றது. ஆனால் பூமியில் ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனும் கூடி நீராகி, அது திரவ வடிவில் பேரளவில் இருந்திருக்கின்றது. இதனால் ஆரம்ப காலத்தில் பூமியானது ஈர நிலப்பரப்பும் ஆக்ஸிஜன் செழிப்புள்ள காற்று மண்டலமும் பெற்ற கோளாக இருந்திருக்கலாம் என்று யூகிக்கின்றார்கள்.

சூரியனுக்கு மிக அருகாமையிலுள்ள புதனில் வெறும் கடினமான உள்ளகம் மட்டும்தான் இருக்கின்றது. சூரிய வெப்பத்தால் அதிகம் தாக்கப்பட்டு, அதன் வெப்பநிலை மிக அதிகமாய் இருப்பதால், நீர் ஆவியாக்கப்பட்டு, காலப்போக்கில் நீர் மூலக்கூறும் ஹைட்ரஜன்-ஆக்ஸிஜனாகப் பகுக்கப்பட்டு, தீவிரமான வெப்ப இயக்கம் காரணமாக வளிமண்டலத்தை விட்டு வெளியேறி இருக்கலாம். இதனால் புதனில் காற்றுமண்டலமே இல்லை.

வெள்ளியும், பூமியும் ஏறக்குறைய சமமான பரிமாணங்களைப் பெற்றிருக்கின்றன, தனிமங்களின் கூட்டுச் சேர்க்கையும் கூட ஒரு

மாதிரித்தான்காணப்படுகின்றது. ஆனால் வெள்ளி, கரியமிலவாயு (carbon di oxide) அதிகமுள்ள தடிப்பான காற்று மண்டலத்தைப்பெற் றிருக்கின்றது. இது சூரியக் கதிர் வீச்சை நிலப்பரப்பிற்கு அனுமதிக் கின்றது. ஆனால் அதே காற்றுமண்டலம், சூரியக் கதிர் வீச்சால் சூடானவெள்ளியின் நிலப்பரப்பு உமிழும் வெப்பக் கதிர்களைவெளியே செல்ல அனுமதிப்பதில்லை. இதனால் வெள்ளி நிலப்பரப்பின் வெப்ப நிலை கொஞ்சங் கொஞ்சமாக உயர்ந்துவிடுகின்றது. இப்பொழுது அந்த வெப்பநிலை 486 டிகிரி சென்டிகிரேடில் சமநிலை கொண்டிருக் கின்றது இவ்வுயர் வெப்பநிலையில் நீரானது திரவ வடிவில் இருக்க முடியாது. அதனால் பூமிக்கு அடுத்திருந்தாலும் வெள்ளியில் உயிரினம் தோன்றக்கூடிய சூழ்நிலை சிறிதும் இல்லை

செவ்வாயில் மிக மெல்லிய வளி மண்டலம் இருக்கின்றது என்றாலும், சூரியனை விட்டு ஓரளவு கூடுதலாகவே தள்ளியிருப் பதால் மிகவும் குளிர்ச்சியாக இருக்கின்றது. அதனால் நீரானது திட நிலையிலேயே இருக்கின்றது.

பூமியானது சூரியனிலிருந்து, நீரின் உறைநிலை (Freezing point) வெப்பநிலையை விடக் கூடுதலாகவும், கொதிநிலை (boiling point) வெப்பநிலையைவிடக் குறைவாகவும் வெப்பம் பெறக் கூடிய வகையில் ஒரு குறிப்பிட்ட தொலைவில் இருக்கின்றது. இதனால் நீர் ஆவியாக்கப்படுவதும் பின்னர் அது குளிர்விக்கப்பட்டு மழையாகப் பொழிவதும் வழக்கமாயிற்று. இந்த நிகழ்ச்சியே பூமியில் உயிரினத் தோன்றலுக்கு வித்திட்டது எனலாம்.

குளிர்ச்சியினால் ஏற்பட்ட இறுக்கத்தினால், பூமியின் உள்ள- கத்திலிருந்து எரிமலை மூலமாக, வாயுக்கசிவு (out gassing) ஏற்- பட்டு ஓரளவு கனமான வளிமண்டலம தோற்றுவிக்கப்பட்டது. வாயுக் கசிவிற்குப் பிறகு ஏற்பட்ட புதிய வளி மண்டலத்தில மீதேன் (methane) அமோனியா (Ammonia) போன்ற மூலக்கூறுகள் பேரளவில் இருந்தன. கரியமிலவாயு மிகக் குறைவாக உள்ள மெல்லிய வளி மண்டலம் இருந்த அந்தக் காலத்தில் சூரியக் கதிர் களில் உள்ள புற ஊதாக் கதிர்கள் அதிக அளவில் பூமியின் பரப்பை எட்டின. இதன் ஆற்றல் மீதேன், அமோனியா, ஹைட்ரஜன் மற்றும் நீர் மூலக் கூறுகள் இவைகளுக்கிடையே இரசாயான வினை களைத் தூண்டின. இதற்கு வளி மண்டலத்தில் ஆயிரக் கணக்கில் ஏற்பட்ட மின்னலும் சாதகமாக இருந்தது.

இவ்வாறு புற ஊதாக் கதிர்களினால் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட மூலக் கூறுகள் உயிரியியல் மூலக் கூறுகளின் ஆரம்ப கட்டமாக அமைந்தன. இந்த தொடக்க நிலையை நிலைப்படுத்தி பாதுகாக்க மேகக் கூட்டங்கள் பெரிதும் துணை புரிந்தன. இந்த மேகங்கள் ஏறக்குறைய ஒரு வெப்பக் காப்பீடு போலச் செயல்பட்டன என்று சொல்லலாம். இப்பொழுதுங்கூட மேகங்கள் இப்பணியைச் செய்து வருகின்றன.


ஒரு விளக்கத்திற்காக, சூரியன் சற்று கூடுதலான வெப்பத்தை பூமிக்கு அளிப்பதாகக் கருதுவோம். பூமி கூடுதலான வெப்பத்தை பெறுவதால், அதன் சராசரி வெப்பநிலை அதிகரிக்கும். அதனால் மிகுதியான நீர் கடலிலிருந்து ஆவியாக்கப்பட்டு, அடர்த்தி யான மேகங்கள் தோற்றுவிக்கப்படும். இவை சூரியனின் கதிர் வீச்சை கூடுதலாகப் பிரதி பலித்து விடுகின்றது. அதனால் அதிகமாக வளிமண்டலத்தை ஊடுருவும் கதிர் வீச்சுக்கள் தடுக்கப்படுகின்றன. அதே சூரியன் சற்று குறைவான வெப்பத்தை பூமிக்கு அளிப்பதாக இருந்தால் அதனால் எந்த விபரீதமும் ஏற் பட்டு விடாது. நீர் ஆவியாவது தானாகக் குறைக்கப்பட்டு, வளி மண்டலத்தில் குறைவான மேகங்களே அப்பொழுது இருக்கும். இவை சூரியக் கதிர் வீச்சை கூடுதலாக வளிமண்டலத்தை ஊடுருவிச் செல்ல அனுமதிக்கின்றன. இப்படி காலப்போக்கில் வெப்பநிலை மாறாமல் இருந்து வந்ததால் உயிரினத்தோற்றம் பரிணாம வளர்ச்சியில் ஈடுபட்டது. அதன் விளைவே இன்று நாம் பார்க்கின்ற தாவரங்களும், விலங்குகளும், மேல் நிலை உயிரினம் என்று கருதப் படுகின்ற மக்களும் இதை அறிவியல் பூர்வமான அனுமானங்களினால் வானவியல் மற்றும் உயிரியல் வல்லுநர்கள் ஒன்றிணைந்து அறிவிக் கின்றனர். இதிலிருந்து உயிரினங்களின் தோற்றத்திற்கும், அதன் பரிணாம வளர்ச்சிக்கும் சூரியனே முதற் காரணமாய் இருந்திருக் கின்றது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. அது உலகம் பெற்ற தவப்பயன் என்று தான் சொல்ல வேண்டும்.

## தமிழ்ச் சங்கத்தின் புதிய செயலாளர்

எண்பது ஆண்டு கால வரலாற்றைத் தன்னுள் அடக்கியிருக்கும் மதுரைத் தமிழ்சங்கம் நாடறிந்த நிறுவனம். மதுரையில் நிலை கொண்டிருக்கும் அங்கயற்கண்ணியின் ஆலயம் ஒரு சிலைக்கோயில்; மதுரைத்தமிழ்ச்சங்கம் ஒரு கலைக்கோயில். இலக்கிய இலக்கணப் புலவர்களை ஆதரித்தும், நூல்கள் வெளியிட்டும் தரமான தமிழ்த் தொண்டு புரிந்து வருகிற மதுரைத்தமிழ்ச்சங்கம் 1971-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் புதிய நிர்வாகக் குழுவினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. மாட்சிமை தங்கிய முகவை மன்னர் இராமநாத சேதுபதி தலைமைப் பொறுப்பேற்றார்கள். புதிய செயலாளரும், நிர்வாகக் குழுவினரும் சங்கத்தின் பல்வேறு பணிகளைத் தொடர்ந்து செய்தனர்.

தனிப்பட்டோர் மறைவதும், தாபனங்கள் நிலைப்பதும் உலக நியதி. இருப்பினும் நீடித்த தொண்டினால் நிலைத்த புகழை நீடு நிறுவியோர் பலராவர். அண்மையில் மே-திங்கள் 5 - ஆம் நாள் இயற்கையில் கலந்து விட்ட கோச்சடை பெருநிலக் கிழார் டி. பி. எம். பெரியசுவாமி தமிழ்ச் சங்கத்தைப் பொன்னே போல் போற்றியவர். அவரது இழப்பில் சங்கம் கண்கலங்கி நின்றபோது சங்கப்பணிகளைச் சால்புறக் காப்பதற்கு முன்வந்தவர் மதுரையின் தலைசிறந்த வழக்கறிஞர் என். எஸ். முத்துமலைச் சாமி ஆவர். தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக் குழு (1-7-84) ஜூலைத் திங்கள் முதல் நாள் கூடியபோது இப்புதிய செயலாளர் ஏகமன தாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையே இதற்குச் சான்றாகும்.

புதிய செயலாளர் மதுரைக்கு அருகில் வைகை நதியின் வளம் கொழிக்கின்ற இராசாக்கூரில் 1929 - ஆம் ஆண்டு உழவர் திருநாளாகிய தைப் பொங்கல் முதல் நாளில் பிறந்தவர். பிறப்பி லேயே இச் சிறப்பு வாய்க்கப் பெற்ற இப்பெருமகனார் மதுரை மரியன்னை உயர்நிலைப் பள்ளியிலும், அமெரிக்கன் கல்லூரியிலும் பயின்று, பின்னர் சென்னையில் சட்டக்கல்வியும் கற்று 1953 - ஆம் ஆண்டு வழக்கறிஞராக வெளிவந்தவர். முப்பதாண்டுகளுக்கு மேலாக மதுரை மாவட்ட நீதி மன்றங்களிலும், சென்னை உயர்நீதி மன்றத்திலும் நூற்றுக்கணக்கான வழக்குகளில் தோன்றி நுணுக்க மாக வாதாடிய திறமையும் சிறப்பும் மிக்கவர். 9 ஆண்டு காலம் மாவட்ட அரசு வழக்குரைஞராகப் பணியாற்றிய பெருமை இவருக்கு



உயர்திரு. என்.எஸ். முத்துமலைச்சாமி

தமிழ்ச் சங்கச் செயலாளர்

உண்டு. எந்தச் சிக்கலையும் நிதானமாக அணுகி நேர்மை வழுவாது முடிவு செய்கின்ற திறமையும், சால்பு உணர்ந்து பணியாற்றும் சிறப்பும், எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் வன்மையும் மிக்கவர். பொதுத் தொண்டில் ஆர்வம் மிக்கவர். ஊராட்சி மன்றத் தலைவராகவும், பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் இருந்தமையே இவற்றிற்குச் சான்றாகும் முப்பதாண்டுகளுக்கு முன்னமேயே பிற்பட்ட ஏழை மாணவர்களுக்கென்று 'மருதுபாண்டியன் மாணவர் இல்லம்' என்ற விடுதியை நடத்திய பெருமை இவருக்கு உண்டு.

மதுரைப் பல்கலைக் கழகத்தின் (செனட்) பேரவை உறுப்பினராக (1972 - 75) ப் பணியாற்றியபோது பேரறிஞர் மு. வ அவர்களுடன் நெருங்கிப் பழகியவர். மதுரைச் சுழற்குழுவின் (ரோட்டரி) தலைவராக இருந்து இவர் ஆற்றிய சமூகப்பணிகள் பற்பல. இவரது தலைமையின் கீழ் தமிழ்ச்சங்கத்தின் பல்வேறு இலக்கியப் பணிகளும், கல்லூரிகளின் வளர்ச்சியும் பொலிவும் வலிவும் பெற்று ஓங்கும் என்பது உறுதி.

—— பொறுப்பாசிரியர்.

---

**மருட்சி**

இருளடர்ந்த கானகத்தில்
கனன்றெரியும் கண்கள் —
ஒளி உமிழும் கவர்ச்சியிலே
உண்மையறிந் தேனில்லை
எதிர்நில்லா தோடுகின்ற
இனம்புரிந் தே னில்லை
கடும்புலியென் றேயுணர்ந்தும்
காலம் கடந்துண்மை
கண்டதனாற் பயனுண்டோ!

— ஆங்கிலம் : தாவூது கமால்
தமிழில் : அசாமி

பெஷாவர் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரியும் கமால் ஒரு கவிஞர். அவரது கவிதைகள் இந்தி, உருது ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## மல்யுத்தப் போட்டியின் எதிர்காலம்

உலக ஒலிம்பிக் பந்தயங்களில் இடம் பெற்று வருகின்ற மல் யுத்தப் போட்டிகள் முழுதுமாகத் தடை செய்யப்படும் என்று தெரி கின்றது. மின்னல் வேகத்தில் பாய்ந்து எதிரியின் மீது சரமாரியான குத்துகளைப் பொழிந்து தள்ளும் முகமது அலி உலகப்புகழ் பெற்ற மல் யுத்த வீரர் 1960ஆம் ஆண்டு ஒலிம்பிக் நிகழ்ச்சியில் தங்கப் பதக்கம் பெற்றவர். நாற்பத்திரண்டு வயது நிரம்பிய முகமது அலி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக குத்துச்சண்டை புரிந்து வருபவர். நான் ஜெயித்துக் கொண்டேயிருப்பேன் என்று தன்-னைப் பற்றி அவர் மிக்க பெருமிதமாகச் சொல்லுவது உண்டு.

தற்போது அவர் நியூயார்க் நகரத்தில் நரம்பு-மனவியல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தடுமாறிய பேச்சு, தொடர் பில்லாத கருத்துகள், அதிகமான களைப்பு — ஆகிய இவற்றால் நோயாளியாக இருக்கிற முகமது அலியின் மூளைப்பகுதியில் உள்ள நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டுள்ளது என்று கருதப்படுகின்றது. வன்மையாகத்தாக்கப்படும்போது முகமும், கன்னமும், நெற்றிப்-பகுதியும் எத்துணைக்காலத்துக்குத்தான் ஈடு கொடுக்க முடியும்? பலமான அடியினால் மூர்ச்சையுற்று களத்திலேயே மாண்டு போன குத்துச்சண்டை வீரர்கள் எழுபது பேருக்கு மேல் இருக்கும் என்று கணக்கிட்டுள்ளனர். 'நாகரிகமுள்ள எந்த மனித சமுதாயமும் குத்துச் சண்டையினை அனுமதிக்கக்கூடாது' என்று அமெரிக்க மருத்துவக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. மல் யுத்தத்தினையே தடை செய்ய வேண்டும் என்பது ஆங்கிலநாட்டு நரம்பியல் மருத்துவர்-களின் கோரிக்கை. முரட்டுத்தனமான இந்த விளையாட்டுக்கு எதிர் காலம் இல்லை என்று உறுதியாகத தெரிகிறது.

## இலக்கியத்துக்கு நேபெல்பரிசு

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான செக்கோசுலாவாகியாவில் வாழும் எண்பது வயதைத் தாண்டிய தொண்டு கிழவரான ஒரு கவிஞருக்கு இந்த ஆண்டின் நோபெல் பரிசு கிடைத்துள்ளது. அவரது கவிதைகள் முப்பது தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

## சங்கச் செய்திகள்

## மதுரைத் தமிழ்ச் சங்கத்

## தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்

*மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள்:*

---

1983-84ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளி-பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும், மேல்நிலைப்பள்ளி - பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று நூற்கள் பரிசு பெற்ற மாணவர்களையும் பிற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வாழ்த்துகிறோம். மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த்தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பிற அன்பர்களுக்கும் எங்களது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய விபரம்

உயர்நிலைப்பள்ளி 10-ஆம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்:

| வ. எண். | மாணவர் பெயர், பள்ளி முகவரி | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஏ. கயல்விழி<br>தஸ்நேவிஸ் மாதா பெண்கள் மேல் நிலைப்பள்ளி,<br>தூத்துக்குடி-1 | 179 | முதல் பரிசு | ரூ.<br>100.00 |
| 2 | மு. விஜயன்<br>திரு எ. ல. வ. உயர்பள்ளி க புதுப்பட்டி.<br>மதுரை — மாவட்டம் | 175 | இரண்டாம் பரிசு | 50.00 |
| 3 | அ ஷர்மிளா<br>கண்கார்டியா மேல்நிலைப் பள்ளி, ஆம்பூர்.<br>வ ஆ-மாவட்டம் | 174 | மூன்றாம் பரிசு | 25.00 |
| 4 | வெ.கணேசன்<br>புனித யோவான் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை | 173 | ஆறுதல் பரிசு | 10.00 |
| 5 | மு நபீஸா மாஹ்ற ஜபீன்<br>சிறுமலர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, நாகமலை,<br>மதுரை—19 | 173 | ” | 10.00 |
| 6 | கி. தனலெட்சுமி<br>மங்கையர்க்கரசி மேல்நிலைப் பள்ளி,<br>மதுரை—10 | 173 | ” | 10.00 |

| வ. எண். | மாணவர் பெயர், பள்ளி முகவரி | மதிப்பெண் 200க்கு | பரிசு விவரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 7 | எம். பவுல் பாக்கியராஜ் போப் நினைவு மேல்நிலைப் பள்ளி, சாயர்புரம், நெல்லை மாவட்டம் | 172 | ,, | 10.00 |
| 8 | எஸ். அனுராதா என். எல். சி. பெண்கள் மேல்நிலைப் பள்ளி நெய்வேலி | 172 | ,, | 10.00 |
| 9 | என். ரவி சேதுபதி மேல்நிலைப்பள்ளி மதுரை—1 | 172 | ,, | 10.00 |
| 10 | எஸ். வள்ளி தேவசேனா மாநகராட்சி மகளிர் உயர்நிலைப்பள்ளி மணிநகரம், மதுரை – 1 | 172 | ,, | 10.00 |
| 11 | கே. சத்யபாபு அமெரிக்கன் கல்லூரி மேல்நிலைப்பள்ளி தல்லாகுளம், மதுரை—2 | 171 | ,, | 10.00 |
| 12 | ஆர். அன்ன பூரணி கேப்ரன்ஹால் மகளிர் மேல்நிலைப்பள்ளி மதுரை—10 | 171 | ,, | 10.00 |
| 13 | கோ. கோபிகிருஷ்ணன் ஸ்ரீ வெங்கடேசுவரா உயர்பள்ளி அப்பநாயக்கன் பட்டி, கோவை | 170 | ,, | 10.00 |

| வ. எண். | மாணவர் பெயர், பள்ளி முகவரி | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 14 | டி. எம். பிரேமலதா<br>புனிதமரியன்னை மகளிர் உயர்பள்ளி கோத்தகிரி,<br>நீலகிரி மாவட்டம் | 170 | ,, | 10.00 |
| 15 | கி. கிருஷ்ணவேணி<br>ஏ. வி. எம். மாரிமுத்து நாடார் மேல்நிலைப்பள்ளி<br>விளாம்பட்டி, மூகவை | 170 | ,, | 10.00 |
| 16 | அ. முருகன்<br>அரசினர் உயர்பள்ளி<br>ஒக்கரைப்பட்டி, மதுரை | 170 | ,, | 10.00 |
| 17 | கே. சாந்தி,<br>பி. கே. என். மகளிர் மேல்நிலைப்பள்ளி<br>திருமங்கலம் மதுரை. | 170 | ,, | 10.00 |
| 18 | க. உமாமகேசுவரி<br>பி. கே என். மகளிர் மேல்நிலைப்பள்ளி<br>திருமங்கலம்—மதுரை | 170 | ,, | 10.00 |
| 19 | எஸ் எஸ். சபிதா மாலா<br>சௌராட்டிரா மகளிர் மேல்நிலைப்பள்ளி<br>மதுரை—9 | 170 | ,, | 10.00 |
| 20 | டி. சங்கரசுப்பு<br>போப் நினைவு மேல்நிலைப் பள்ளி, சாயர்புரம் | 170 | ,, | 10.00 |

## மேல்நிலைப்பள்ளி பன்னிரண்டாம் வகுப்புத் தமிழ்த்தேர்வில்ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்

| வ. எண். | மாணவர் பெயர், பள்ளி முகவரி | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஏ. லில்லி கிரேஸ்<br>பெண்கள் மேல்நிலைப்பள்ளி<br>இலால்குடி | 177 | முதல் பரிசு | ரூ<br>100.00 |
| 2 | சி.வி. லதா<br>சௌராட்டிரா மகளிர் மேல்நிலைப்பள்ளி, மதுரை—9 | 173 | இரண்டாம் பரிசு | 50.00 |
| 3. | எஸ். சிவா<br>புனித மரியன்னை மேல்-நிலைப்பள்ளி, மதுரை—1 | 172 | மூன்றாம் பரிசு | 25.00 |
| 4 | எம். லலிதா<br>என்.எல்.சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நெய்வேலி | 171 | ஆறுதல் பரிசு | 10.00 |
| 5 | கு. கலாதேவி<br>மங்கையர்க்கரசி மேல்நிலைப் பள்ளி<br>மதுரை—10 | 171 | ,, | 10.00 |
| 6 | ரா. பிரபாவதி<br>மங்கையர்க்கரசி மேல்நிலைப் பள்ளி, மதுரை—10 | 171 | ,, | 10.00 |
| 7 | ஏ.கே. மல்லிகாபானு<br>இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி<br>புதுக்கோட்டை | 170 | ,, | 10.00 |

| வ எண் | மாணவர் பெயர், பள்ளி முகவரி | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 8 | ஆர் தமிழ்ச்செல்வி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, இலால்குடி. | 170 | ,, | 10.00 |
| 9 | வெ. கலைக்கண்ணன் புனித வளனார் மேல்நிலைப் பள்ளி, மஞ்சக்குப்பம், கடலூர் | 170 | ,, | 10.00 |
| 10 | வி. பூங்குழலி அரசினர் மகளிர் மேல் நிலைப்பள்ளி, சோழவந்தான் | 170 | ஆறுதல் பரிசு | 10.00 |
| 11 | வி முத்துலட்சுமி சாராள் தக்கர் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை | 169 | ,, | 10.00 |
| 12 | ஆர். வேலுச்சாமி எஸ் ஆர் என். வி. மேல்-நிலைப்பள்ளி, இலக்குமி நாயக்கன் பாளையம் | 169 | ,, | 10.00 |
| 13 | பி.சி. சேகர் எஸ். எம். எஸ். எம். மேல் நிலைப்பள்ளி, சுசீந்திரம் | 169 | ,, | 10.00 |
| 14 | வி. சகாயராணி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, இலால்குடி | 169 | ,, | 10.00 |
| | | | மொத்தம் | 630.00 |

# தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர், வணக்கம்.

பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள் புகழ் பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தைக் கூடல் மாநகரில் 1901-ஆம் ஆண்டு நிறுவினார்கள் தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன்' நோக்கம் மிகஉயர்ந்ததாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில் தமிழில் சிறந்து புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச்சங்கம் வாயிலாகத் தமிழ்க் கல்லூரி ஒன்றை நிறுவினார். இன்றைக்குக் கவிஞர்களாகவும், தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர் இக்கல்லூரியில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் பட்டத்தைப் பெற்றவர்களாவர்

*பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்குத் திருவுருவச்சிலை :*

பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்த தொண்டினை நினைவுகூரும் வண்ணம் அன்னாரின் திருவுருவச் சிலையை மதுரையின் மையப்பகுதியில் நிறுவி தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது

*தேர்வின் அமைப்பும் பயனும் :*

பொதுத்தேர்வில் மாணவர்கள் தமிழில் தோல்வி அடைந்து விடக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவரவர்கள் தொடங்கிய தமிழ்த்தேர்வு கடந்த 83 ஆண்டுகளாகச் சிறப்புடன் செவ்வனே நடத்தப்பெற்று வருகிறது. இத்தேர்வில் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு பெரும் பயன் பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப்பாடப்பகுதிகளே தமிழ்ச்சங்கத் தமிழ்த்தேர்விற்கும் உரிய பாடப்பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச்சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வு நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு (PUBLIC EXAMINATION) முன்னதாகவே தமிழ்ச்சங்கம் தேர்வினை நடத்தி மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத்

தேர்விற்கு நன்முறையில் தங்களைத் தயார் செய்துகொள்ளத் தமிழ்ச் சங்கத் தேர்வு பெரும் வாய்ப்பளிக்கிறது.

*சான்றிதழும், சிறப்புப் பரிசும்:*

தமிழ்ச்சங்கத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும், மேல் நிலைப்பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்கபரிசுகள் அளிக்கப்படுகின்றன அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் முப்பத்துநான்கு மாணவர்கள் ரொக்கப்பரிசினைப் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ரொக்கப் பரிசுபெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் தமிழ்ச்சங்க வெளி யீடாகிய ''செந்தமிழ்'' 1984 செப்டம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும், பெருமையும் என்றும் உண்டு.

*தேர்வு நாள், தேர்வுக் கட்டணம்:*

| | தேர்வு நாள் | தேர்வுக் கட்டணம் |
|---|---|---|
| உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு | 9-2-1985 | ரூ. 4-00 |
| மேல்நிலைப்பள்ளி | | |
| பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தமிழ் | 2-2-1985 | ரூ. 4-00 |
| சிறப்புத்தமிழ் | 4-2-1985 | ரூ. 2-25 |

*அன்பளிப்பு:*

விடைத்தாள் திருத்துவதற்குரிய அன்பளிப்புத் தொகையினைத் தாள் ஒன்றிற்குப் பின்வருமாறு மிக உயர்ந்த அளவிற்கு உயர்த்தப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு | ரூ. 1-00 |
| மேல்நிலைப்பள்ளி பன்னிரண்டாம் வகுப்பு | ரூ 1 00 |
| ''சிறப்புத்தமிழ் | ரூ. 1-10 |

*அன்பு வேண்டுகோள்:*

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்திடத் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே அறிந்திடவேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றோம். ஆகையால் இவ்வறிக்கை கிடைத்த உடன் இத்துடன் அனுப்பப் பட்டுள்ள பாரத்தில் உங்கள் பள்ளியில் இருந்து கலந்து கொள்ளும்

மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் குறித்து அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்-களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் பாரம் கிடைத்தவுடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான (1) மாணவர் பெயர்ப் பதிவுப் பட்டியல் (2) வரவுசெலவுப்பட்டியல் 3) விடைத்-தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர்ப் பட்டியல் (4) கால அட்டவணை, தேர்வுக் கட்டண விபரம் தேர்வுச் செலவிற்குப் பிடித்து கொள்ளும் தொகைவிபரப் பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் இவ்-வாண்டு தேர்வில் கலந்துகொள்ள இயலவில்லை யென்றாலும் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

*அரசு ஆணை.* R. Dis. 166528/65 Dated 22-12-65 என்ற ஆணையின் (G. O) மூலம் மதுரைத் தமிழ்ச்சங்கத் தமிழ்த் தேர்-வினைக் கல்வி நிலையங்களில் நடத்திக்கொள்வதற்கு அரசு அனு-மதி அளித்துள்ளது.

*சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*

*செயலாளர்,*
*மதுரைத் தமிழ்ச்சங்கம்,*
*தமிழ்ச் சங்கச் சாலை,*
*மதுரை 625 001.*

இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படிச் சான்றோர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

சேதுபதி மகாராணி
த. இந்திராதேவி
தலைவர்

தங்களன்புள்ள,
என்.எம். ... 
செயலாளர்

## 1984-85 உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி தமிழ்த் தேர்வுகள்

| வகுப்பு | தேர்வுக்கட்டணம் | தேர்வுநாள் | தேர்வு நேரம் |
|---|---|---|---|
| உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு | ரூ. 4-00 | 9-2-1985 முதல்தாள் | 10-12.30 |
| | | இரண்டாம்தாள் | 2-4.30 |
| மேல்நிலைப்பள்ளி இறுதயாண்டு பொதுத்தமிழ் | ரூ. 4-00 | 2-2-1985 முதல்தாள் | 10-1 |
| | | இரண்டாம்தாள் | 2-5 |
| சிறப்புத்தமிழ் | ரூ. 2-25 | 4-2-1985 | 10-1 |

*கட்டணம அனுப்ப வேண்டிய இறுதி நாள் 9-1-1985*

### தேர்வு நடத்துவதற்காகப் பிடித்துக்கொள்ள வேண்டிய செலவுத் தொகை

10 மாணவர்களுக்கு மேல் தேர்வெழுதும் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகள் மொததத் தோவுக்கட்டணத் தொகையில் பதினைந்து விழுக்காடு (15%) தேர்வுச் செலவிற்காகப் பிடித்துக் கொண்டு மீதித்தொகை முழுவதையும் சங்கததிறகு அனுப்பிவைக்க வேண்டும். 10 மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளிகள் செலவுத தொகை ஏதும பிடித்துக் கொள்ளாமல் முழுததொகையினையும் சங்கத்திற்கு அனுப்பவேண்டும். தேர்வு நடததும் வகையில் ஆகும அனைத்துச் செலவிற்கும் நாங்கள் குறிப்பிட்டுள்ள இததொகைககு மேல் செலவானால் அத்தொகையை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம். குறிப்பிட்டுள்ள செலவுத் தொகைக்கு மேல் செலவு ஆகாதபடி தேர்வு மேற்பார்வையாளர்களுக்குரிய அன்பளிப்புத் தொகையினைக் கட்டுப் படுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மாணவர் பெயர்ப் பட்டியலோடு விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பட்டியல், வரவு செலவுப் பட்டியல் முதலியவற்றையும் இணைத்து அனுப்பவேண்டும்.

தேர்வுக் கட்டணமும் தேர்வு பற்றிய குறிப்புகளும் அனுப்ப வேண்டிய முகவரி:-

*செயலாளர்,*
*மதுரைத் தமிழ்ச் சங்கம்,*
*54, தமிழ்ச் சங்கச் சாலை,*
*மதுரை 625001.*

## தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை

அனுப்புநர் : ______________________

______________________

______________________

பெறுநர்

செயலாளர் அவர்கள்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001.

ஐயா,

எங்களுடைய உயர்நிலைப்பள்ளி/மேல் நிலைப் பள்ளி மாண-வர்கள் நம்முடைய தமிழ்ச்சங்கத் தமிழ்த்தேர்வில் தோராயமாகக் கீழே குறிப்பிட்டுள்ள விபரப்படி கலந்து கொள்வார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். இந்த மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர் பெயர்ப் பட்டியலும், தேர்வு பற்றிய பிற குறிப்புக்களையும் அனுப்பி வைக்கவும். விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ______

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உயர்நிலைப் பள்ளி (பத்தாம் வகுப்பு) | ______ |
| மேல்நிலைப் பள்ளி 2-ஆம் ஆண்டு (பொது) | ______ |
| மேல்நிலைப்பள்ளி 2-ஆம் ஆண்டு சிறப்புத் தமிழ் | ______ |

நாள்: இங்ஙனம்

தலைமையாசிரியர் / தமிழ்த்துறைத் தலைவர்

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## தமிழ்நாடு, இந்தியா

## வெளியீட்டுத் துறை இதழ் வெளியீடுகள்

செய்திமலர் — திங்கள் இதழ் தமிழ்க்கலை—முத்திங்கள் இதழ்

News Bulletin— Tamil Civilization —

திங்கள் இதழ் முத்திங்கள் இதழ்

### கட்டண விவரம்

| திங்கள் இதழ் | முத்திங்கள் இதழ் |
|---|---|
| ஓராண்டுக்கு உரூ. 5/- 4 தாலர் | ஓராண்டுக்கு உரூ. 50/-20 தாலர் |
| 3 ஆண்டுகளுக்கு உரூ. 12/-10 தாலர் | 5 ஆண்டுகளுக்கு உரூ. 200/-40 |

### நூல் வெளியீடு

1) மராட்டியர் செப்பேடுகள் — புலவர் செ. இராசு ரூ. 150/-
(ஆங்கிலச் சுருக்கத்துடன்)

2) கலித்தொகை (மறு மதிப்பு)
நச்சினார்க்கினியர் உரை
இ.வை. அனந்தராமையர் பதிப்பு-நிழற்பட அச்சேற்றம் ரூ. 150-

3) சங்க இலக்கியக் கருத்தரங்குக் கட்டுரைகள் ரூ 30-

4) ஆராய்ச்சித்தொகுதி-மு. இராகவையங்கார் ரூ. 100/

5) தொல் - சொல் - தெய்வச்சிலையார் உரை ரூ. 60/

6) தொல்காப்பியம் - நன்னூல் - சொல்லதிகாரம்
க. வெள்ளைவாரணனார் ரூ. 70/

7) நன்னூல் - காண்டிகையுரை - ஆறுமுகநாவலர் ரூ. பதிப்பு 65-/

நூல்கட்குக் கழிவு 25% அஞ்சற் செலவு தனி

கட்டணத் தொகையைப் பணவிடை மூலமாகவோ, வரைவோலை மூலமாகவோ பதிப்புத்துறை இயக்குநர் (டைரக்டர் ஆப் பப்ளிகேசன்) பெயருக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல்கள் பல்கலைக் கழகக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு 40% கழிவு நீக்கித் தரப்படும்.

இதர விவரங்களுக்குப் பதிப்புத்துறை இயக்குநர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613001, தமிழ்நாடு என்ற முகவரியில் தொடர்பு கொள்க.

கண்காணிப்பாளர்
பதிப்புத்துறை

மணியம் பிரஸ் மதுரை 9.